# தீப்பொறி

ஆசிரியர்:- எம்.கே.அந்தனிசில்

தீ—1—3—9—1967—பக்கங்கள்—8—விலை—சதம்—20—வார—ஏடு—பொறி—21

# தீண்டாமை வேண்டாமா? விபச்சாரம் வேண்டுமாம்!

## செல்வநாயகத்தின் ஏடே கொல்லைப் பக்கம் ஓடு!

இலங்கைத் தமிழ் மக்களை தீண்டாமை கருவறுத்துவருகிறது.

இந்த இருபதாம் நூற்றுண்டிலும் தமிழ் பகுதிகள் 'இருண்ட' கண்டங்களாகவே இருக்கின்றன.

இதன் காரணமாக இக்கண்டங்களில் காட்டுமிராண்டித்தனங்கள் அவ்வப்போது கட்டவிழ்த்துவிடபட்டுவந்திருக்கின்றன.

இதன் எதிரொலி பலவிடங்களில் கேட்டிருக்கிறது. கேட்கிறது. இனிமேலும்கேட்கலாம்.

இதற்கிடையில் சாதி ஒழிப்பு 'கத்தல்களும்' ஐந்தாண்டுக்கொருதடவை கேட்பது வழக்கம். பாராளுமன்றத் தேர்தல் திருவிழாக்களையொட்டியே 'சாதி ஒழிக' என்றகோஷம் போடுவது வழக்கம். தேர்தல் முடிந்த பின் 'எளிய சாதி' என்று கொக்கரிப்பதும் பரம்பரை வழக்கம்.

இன்று எல்லோருமே 'சாதிகள் ஒழிக' - தீண்டாமை ஒழிக' என்று கூறுகிறார்கள். 'தந்தை' செல்வநாயகம் கூறுகிறார் அவரது தமிழரசுக் கட்சியும் கூறுகிறது. பொன்னம்பலமும் சாதியை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறார். அவரது 'அப்புக்காத்துமார்' கட்சியும் தீண்டாமை ஒழிக என்று'வழக்கு' பேசுகிறது. எல்லோரும் தான் 'ஒழிக' என்கிறார்கள். வரவேற்க வேண்டிய விஷயம்.

ஆனல் தீண்டாமையை எப்படி ஒழிக்கப் போகிறார்கள்? எப்போது ஒழிக்கப் போகிறார்கள் என்பதுதான் பிரச்சினை!

இவர்கள் அனைவரும் சாத்வீகப் போராட்டத்தின் மூலமே தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனல் சங்கானையில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது சாத்வீக முறையா? சமாதான வழி

### வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறது போலி காந்தியின் ஈன ஏடு!

யா? நசுக்கப்பட்ட மக்களை மேலும் மேலும் அடக்குவதற்கும் அவர்களது போராட்ட மனப்பான்மையை மடக்குவதற்குமே இத்தகைய பிரச்சாரங்கள் செய்யப் படுகின்றன,

இந்த நிலையில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்று தீண்டாமை ஒழிப்புக்கு ஒரு 'புது' வழியைக் கூறியிருக்கிறது 'பாதர்' செல்வ நாயகத்தின் மூலதனத்தில் 'முழங்கும்' பத்திரிகையும், தமிழரசுக் கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகையுமான 'சுதந்திரன்'!

27-8-67 ல் வெளிவந்த 'சுதந்திரன்' 'தீண்டாமையை விபச்சாரத்தினுல் தடுக்க முடியுமா' என்ற கேள்வியைக் கே[illegible], ''விபச்சாரத்துக்[illegible] டாமை இ[illegible] சமய இன பே[illegible]யெல்லாம் தாண்டி நிற்பது அதுதான்'' என்று 'அறிவுரை'யும் கூறியுள்ளது. தீண்டாமை ஒழியவேண்டுமானுல் விபச்சார விடுதிகளை ஆரம்பிக்கலாமே என்று 'குத்தல்' பண்ணியிருக்கிறது போலிக் காந்தியின் பொடிப் பத்திரிகை.

தீண்டாமை ஒழிப்புக்கு இதுதான் தமிழரசின் கண்டுபிடிப்பா? தமிழ்மக்கள் அனைவரும் திரண்டெழுந்து கண்டனம்தெரிவிக்கவேண்டும்.

# முப்படை திரட்டல்! மக்களை மிரட்டல்!

சமீபத்தில் ஒரு பொது வேலை நிறுத்த ஆலோசனை சம்பந்தமான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அதைத் தொடர்ந்து 'எதையும் சமாளிக்கத் தயாராக விருக்கின்றேன்' என்று பிரதமர் விடுத்த சவாலும் பத்திரிகைகளில் வெளிவந்தது.

நாட்டு மக்களின் தலைக்கு விலைபேசும் விலைவாசி உயர்வைச் சமாளிக்காத பிரதமர், வேறெதையோ சமாளிக்கப் போவதாக 'முழங்கி'யிருக்கிறார் என்று முதலாளித்துவப் பத்திரிகைகளும் 'முழங்கி'யுள்ளன.

அதுமட்டுமா? விமானப் படை, கடல்படை, தரைப்படை ஆகிய முப்படைகளுடனும் பிரதமர் கலந்தாலோசனை பண்ணியிருப்பதாகவும் தளபதிகள், பிரதமர் ஆகியோரின் 'போட்டோ'க்களுடனும் செய்திகள் வெளிவந்திருந்தன.

இச்சந்தர்ப்பத்தில் முப்படைத் தளபதிகளின் 'போட்டோ'க்களைப் பிரசுரிப்பதன் மூலம் மக்களைப் 'பூச்சாண்டி' காட்டலாம் என்று முதலாளித்துவப் பத்திரிகைகளும் நினைத்துவிட்டன. எனவே பூச்சாண்டி காட்டியிருக்கின்றன. இந்த நாட்டின் 'மக்கள் அரசாங்கம்' அவசரகால நிலைமையைக் கையில் வைத்துக்கொண்டுதான் ஆள வேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு அது 'மக்கள் அரசாங்கம்' என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

இந்த மக்கள் அரசாங்கத்தில் மக்களின் கோரிக்கைகள் ஊதாசீனம் செய்யப்படும் போது, அதை மக்கள் ஆர்ப்பாட்டம் மூலம் ஆட்சேபிக்க முன்வந்தால் முப்படைகளுடன் பிரதமர் பேட்டியை நடத்துகிறார். மக்களை மிரட்ட முப்படை திரட்டுவதாகக் காட்டிக் கொள்கிறார். எதையும் சமாளிக்கத் தயார் என்று வேறு 'கர்ச்சனை'செய்கிறார், நாட்டின் தலைவர் என்ற வகையில், நாட்டின் பிரச்சினைகளை பிரதமர் சமாளிக்கத் தவறிவிட்டார். ஆனல் வேறெதையோசமாளிக்கப் போகின்றாராம். எத்தனை நாட்களுக்குத்தான் 'படைகளை'க் காட்டி மக்களை மிரட்டிக் கொண்டிருக்கப் போகிறார்களோ!

இவர்கள் கூறிய ஜனநாயகம் வெறும் 'கேலிக் கூத்து' என்பது இன்று உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. ஊதியம் கேட்கும் மக்களை எதிர்த்து, சோறு கேட்கும் மக்களை எதிர்த்து ஆட்சியினர் துப்பாக்கியை ஏந்தத் தயாராகிக்கொண்டிருக்கின்றனர். தேர்தல் காலங்களில் 'அப்பிள்' தருவோம் என்றார்கள். ஆனல் இன்று மக்கள் கேட்டபது 'அப்பிள்' அல்ல. வெட்டிய அரிசியைக் கேட்கிறார்கள். தேவையான உபஉணவுப் பொருட்களைக் கேட்கிறார்கள். நியானமான விலையில்கேட்கிறார்கள். முடியாதெனில் அதைச் சமாளிக்க ஊதிய உயர்வு கேட்கிறார்கள். ஆனல் இவைபற்றியெல்லாம் அறிந்தும் அறியாதவர்கள் போல் நடிக்கும் 'மக்கள் அரசாங்கம்' மக்களைப் பயமுறுத்திக் கொண்டே பட்டினி கிடக்கும் மக்களிடம் 'தேசிய பஜனை' பாடிக்கொண்டிருக்கிறது.

**புரட்சிகர வார ஏடு!**

# சீனமிரட்டலா? சீன எதிர்ப்பா?

சீன மிரட்டலா? சீன எதிர்ப்பா? எது உண்மை?

**சீனா சீறியதா? இலங்கை மீறியதா? எது உண்மை?**

ஈழத்து மக்கள் எத்தகைய விருப்போ வெறுப்போ இன்றி சீர் தூக்கிப் பார்க்க வேண்டிய முக்கிய விஷயம் இது.

அரை நிர்வாணப் படங்களையும், முழு நிர்வாணச் செய்திகளையும் தந்து 'நீடூழி' பிழைப்பு நடாத்தும் எமது நாட்டின் மஞ்சள் பத்திரிகைகள் சமீபத்தில் தந்துவிட்ட கஞ்சல் செய்திகளால் அவைகளுக்கு கைமேல் பலனேதும் கிட்டவில்லை என்பது உண்மையே.

சொந்த பிழைப்புக்காக கற்பழிப்புச் செய்திகளைப் போட்டு காசு பறிக்கும் இக் கழிசடை ஏடுகள் தமது வர்க்கப்பிழைப்புக்காக பாட்டாளியின் சொர்க்கமான செஞ்சீனா மீது வசைப்பாடத் தொடங்கியுள்ளன.

இத்தரங் கெட்ட முதலாளித்துவ தப்பட்டைப் பத்திரிகைகள் தரும் கற்பழிப்புச் செய்திகளைப் படித்து காறி உமிழும் மக்கள் இவையின் சீனா பற்றிய கயிறு திரிப்புச் செய்திகளையிட்டும் சினம்கொள்வார்களா? மாட்டார்களா?

ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏவல் நாய்களாகச் சேவைச் செய்யும் இப்பீடை ஏடுகள் 'தேசப்பற்று' பற்றி தற்போது எழுதிவருவது கோமாளியின் தெருக்கூத்துப் போன்றதாகும்.

காலத்திற்கேற்ப, லாபத்திற்கேற்ப வேஷம் போடுவது, துவேசம் தூவுவது இவ்வேடுகளின் உடன் பிறந்த கொள்கை.

ஏகாதிபத்தியத்தின் உள் நாட்டுக் கைக் கூலிகளும் அவர்களின் கைக் கூலி ஏடுகளான முதலாளித்துவ மும்மொழித் தினசரிகளும் இன்று சீன எதிர்ப்பை தூண்ட முயற்சிப்பதின் ஈனத்தனம் என்ன?

இலங்கைச் சரித்திரத்திலேயே சீன எதிர்ப்புப் பிரச்சாரங்கள் பரவலாக திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்டக் காலம் கடந்த பொதுத் தேர்தல் காலமாகும்.

தேர்தலில் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக ஈனப்பிறவிகளைக் கொண்ட யு. என். பி. கட்சி சீனப் புரளிகளை கிளப்பி விட்டது.

'[illegible]ட்லியைச் சுற்றிச் சீனர்கள் திரிவதாக'—இன்று அமெரிக்கப் பாணியில் [illegible]ங்க அமைச்சைப் பெற்றிருக்கும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா [illegible]னர்.

[illegible]. பி.யின் வெற்றியிலேயே தமது விபச்சார வாழ்வு தங்கியுள்[illegible]ன்பதை யுணர்ந்த அபச்சார நாளேடுகளும் 'டட்லியைச் சுற்றி சீனர்கள் திரிவதாக' நாலாபக்கமும் செய்திகளைப் பரப்பின.

திருமதி சிறிமா ஆட்சி திரிகோணமலைத் துறைமுகத்தை சீனர்களுக்கு கொடுக்கப் போவதாகவும் தேர்தல் கால 'சீஸன்' செய்திகள் பிரசுரிக்கப்பட்டன. 'நாடெங்கணும் சீனர்கள் நிறைந்து விட்டதாகவும் இவ் வேடுகளில் செய்திகள் நிறைந்திருந்தன.

இவையெல்லாம் வெறும் புரளிகள் என்பதையும், முதலாளித்துவ சரடுகள் என்பதையும் மக்கள் காலம் தாழ்ந்தாகிலும் உணரவே செய்தனர்.

ஏகாதிபத்திய நாடுகளை மனம் குளிரச் செய்வதற்காக சீன எதிர்ப்பு பிரச்சாரத்தையே தேர்தல் மூலதனமாகக் கொண்டு போட்டிக்கு நின்ற யு. என். பி. கட்சி, ஆட்சிக்கு வந்தப்பின் சீன எதிர்ப்பை கைவிடும் என்றோ இலங்கை சீன நட்புறவை மேலும் உறுதிப்படுத்தும் என்றோ யாரும் எதிர்பார்க்க முடியுமா? இல்லையல்லவா?

மாறாக சீன எதிர்ப்புப் பிரச்சாரங்களை மேலும் விஸ்தரிக்கவும், இலங்கை சீன நட்புறவை மேலும் மேலும் மோசமாக்கி நாசமாக்கவும்தானே முயலும்? இதைத்தான் யூ. என். பி. ஆட்சி இன்று செய்துவருகின்றது. நன்றாக திட்டமிட்டுச் செய்துவருகின்றது. அரை நிர்வாணப் பத்திரிகைகளின் அபாரமான ஆதரவுடன்!

யூ. என். பி. தலைமையிலான ஏழுகட்சி ஆட்சி ஏற்பட்டதிலிருந்து அதன் ஐந்து அமைச்சர்கள் பகிரங்கமாக சீன எதிர்ப்புப் பிரச்சாரங்களைச் செய்துள்ளனர். இதை நாடு அறியும்.

தொழிலமைச்சர் முகமது பன்றியிறைச்சிக் கதைப் பற்றி பிதற்றி, சீனாவை எதிர்த்து அபாண்டமான குற்றத்தைச் சுமத்தினார். ''சீனர்களின் ஒட்டல்களை பகிஷ்கரியுங்கள்'' என்றெல்லாம் உளறினார். ஆனால் இவரின் பன்றியிறைச்சிக் கதையை பொய்யென மறுத்தது சீனாவிலிருக்கும் இலங்கை தூதுவராலயம்.

அப்போது எல்லாம் நம் தூதுவராலயத்தின் அறிக்கையை முழுமனதுடன் ஏற்று முழுசாக பிரசுரிக்க விரும்பவில்லை நம் நாட்டு ஏடுகள்! அல்லாமலும் அவற்றை முழுதாக இரட்டடிப்பும் செய்துவிட்டன.

ஆனால் தற்போது மட்டும் அத்தூதுவராலயத்திற்காக வாதுகள் புரிய வந்துவிட்டன இவ்வேடுகள்! தொழிலமைச்சர் முகமதுவின் கூற்று, சீனாவிலிருக்கும்நமது தூதுவராலயத்தால் மறுக்கப்பட்டதை ஏற்று, நமது அரசாங்கம் தனது மந்திரியின் 'குரங்குச் சேஷ்டைக்காக'செஞ்சீனாவிடம் மன்னிப்புக் கேட்டிருக்கவேண்டும். ஆனால் கேட்டார்களா? கிடையாது!

ஏனெனில், சீன எதிர்ப்பு என்பது நமது ஆட்சியினரின் கொள்கையாகும். தேர்தல்கால மூலதனக் கொள்கையாகும். எனவே, அவர்கள் அதில் முதலெடுக்க முனைவது எதிர்பார்க்கக் கூடியதே! இதில் நாட்டு மக்கள் ஏமாறவேண்டுமா?

சீன எதிர்ப்புப் பிரச்சாரம் என்பது தேர்தல் காலம் தொட்டு இன்றைய வரை, வட இலங்கை முதல் தென்னிலங்கை வரை, கிழக்கிலங்கை முதல் மேற்கிலங்கை வரை அமைச்சர்களாலும், அவர்களின் அடிவருடிப் பத்திரிகைகளாலும் பரவலாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது.

இத்தனை புரளிகளையிட்டு, இத்தனை புரட்டுக்களையிட்டு சம்பந்தப்பட்ட சீனா முன்பு சாதாரண எதிர்ப்பையாவது தெரிவித்திருந்ததா? கிடையாதே? ஒரு வார்த்தையேனும் எதிர்த்துக் கூறியதா? இல்லையே? இலங்கையுடன் உறவைக் காக்க சீனா பெருமையாக நடந்துக் கொண்டது என்றல்லவா கூறவேண்டும். அதின் பெருமையான குணத்தின் பொறுமையைச் சோதிக்கும் செயலல்லவா இன்று இலங்கையில் நடந்துள்ளது.

சீனாவைப் பொறுத்தவரை அது இலங்கைக்குச் செய்யும்உதவி சாமான்யமானதா? சாதாரணமானதா?

இன்று இலங்கையில் கிடைக்கும் ஒவ்வொரு கொத்து 'இலவச' அரிசியும் இங்கிலாந்தில் இருந்து வந்ததல்லவே? இந்திராவால் தந்த தல்லவே? சீனாதானே தருகின்றது? இதை நாட்டு மக்கள் சீர்தூக்கிப் பார்ப்பார்களா? சிந்தையில் கொள்வார்களா?

சீனாவின் தன்னலமிக்க உதவியால் இலங்கை மக்களின் தார்மீக ஆதரவு சீனாவுக்குக் கிடைத்து விடுமோ என்ற அங்கலாய்ப்பில் முதலாளித்துவ அரைநிர்வாணப் பத்திரிகைகள் வேறுவிதமாக கயிறு திரிக்க முயலுகின்றன.

அதெப்படியெனில், இலங்கைக்கும் சீனாவுக்கும் உண்டான 'அரிசி ரப்பர் ஒப்பந்தத்'தால் சீனாவுக்குத் தான் நன்மை அதிகமென்றும் இலங்கையின் ரப்பரைப் போல் உயர்ந்த ரப்பரை சீனா வேறெந்த நாடுகளிலிருந்தும் வாங்க முடியாதென்றும் அதனாலேயே இது சீனாவுக்கு லாபமானதென்றும் முதலாளித்துவ நாயேடுகள் இன்று தொடர்ந்து குரைத்து வருகின்றன.

இது எந்தளவு உண்மை?

**இலங்கையின் உயர்ந்த ரப்பருக்கு உலக மார்க்கெட்டில் உயர்ந்த விலை** கிடைக்காமல் போவதன் காரணமென்ன? அமெரிக்கா தனது செயற்கை ரப்பரை இலங்கை ரப்பருக்கு போட்டியாக உலக மார்க்கெட்டுக்கு கொண்டு வருவதால் அல்லவா இலங்கை ரப்பருக்கு கூடிய விலை கிடைக்காமலும், கூடிய விற்பனை கிடைக்காமலும், விலையாகாமலும் தேக்கம் ஏற்படுகின்றது. இத்தேக்கத்தைப் போக்க, நஷ்டத்தை நீக்க, வேற்று நாடுகள் இலங்கையின் 'உயர்ந்த' ரப்பரை வாங்க முன்வந்தனவா? கிடையாதே? சீன ஏக்கம் பிடித்தலையும் பத்திரிகைகள் இதை மறுக்குமா? உண்மைதானென்ன?

இலங்கை ரப்பருக்கு சீனா உலக மார்க்கெட் விலையிலும் பார்க்க கூடுதலான விலை கொடுக்கின்றது. அத்துடன் சீனாதரும் அரிசியையும் உலக மார்க்கெட் விலையைவிட மிகக் குறைந்த விலையில் இலங்கைக்குத் தருகின்றது. இது தன்னலம் கருதா உதவியல்லவா? பிறர் நலம் கருதும் பண்பு அல்லவா?

இந்த அரிசி ரப்பர் ஒப்பந்தமானது தொடர்ந்து நீடிப்பதை அரசாங்கத்துக்குள் இருக்கும் தீய சக்திகள் விரும்பவில்லை. இதைப் போன்று இலங்கை சீன உறவு தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்பதையும் இத்தீய சக்திகள் விரும்பவில்லை.

இலங்கை சீன அரிசி-ரப்பர் ஒப்பந்தம் இவ்வருட அக்டோபர் மாதத்தில் காலாவதியாகவிருக்கிறது. அது மீண்டும் புதுப்பிக்கப் படக்கூடாதென்பதற்காகவே ஆட்சிக்குள் இருக்கும் ஒரு ஈனக் கும்பல் சீன உறவை முறிப்பதற்கு முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது.

# சீனா சீறியதா? ஈழம் மீறியதா?

இதன் காரணமாகத்தான் சீனாவை அனாவசியமாக ஆத்திரம் ஊட்டும் செயல்கள் நடைப்பெற்றிருக்கின்றன.

சமீபத்தில் 'அயோனிஸ்' என்ற கப்பலில் சீன தூதுவராலயத்துக்கு வந்த பொருட்கள் சில திருடப்பட்டுள்ளது என்பதை இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால் இதற்கான பொறுப்பிலிருந்து அரசாங்கம் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது ஏன்?

இப் பொருட்களை கொண்டு வந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தங்கியிருக்கும் போது, இப் பொருட்கள் திருடப்பட்டு அழிக்கப்பட்டிருப்பதால் இதற்கு அரசாங்கம் என்ன பதில் சொல்லப் போகின்றது.

சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்துக்கு நமது அரசாங்கம் அனுப்பும் பொருட்கள் சீன துறைமுகத்தில் இப்படிச் சூறையாடப் பட்டிருந்தால் நமது அரசாங்கத்தின் மனோ நிலை எப்படியிருக்கும்?

எனவே செஞ்சீனா இவ்விஷயத்தில் கண்டிப்பாக விருந்தது எவ்விதம் தவறாக இருக்கமுடியும்? இதையிட்டு செங்காவலர் நடத்திய ஆர்ப்பாட்டமும் நியாயமானதே!

சீன தூதுவராலயத்துக்கு வந்த பொருட்களை சின்னா பின்னமாக்கும் வேலையை ஒரு பிற்போக்கு கோஷ்டி சிரமேற் தாங்கி நடத்தியிருக்கின்றது. இதற்கு அரசாங்க அதிகாரிகள் சிலரும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள்.

தொடர்ச்சியானசீன எதிர்ப்புப்பிரச்சாரங்களுக்கும், கப்பலில் வைத்து சீன தூதுவராலயப் பொருட்கள் சூறையாடப்பட்டதற்கும், அதையிட்டு அரசாங்கத்தின் மௌனத்துக்கும் அரசியல் பின்னணியே காரணமாகும். சீனாவின் நட்பு இங்கே மீறப்பட்டுள்ளது. இது அப்பட்டமான உண்மை.

இலங்கைக்கும் சீனாவுக்கும் உள்ள சினேகபூர்வமான நட்புறவை கெடுப்பதற்கும் முறிப்பதற்கும் மேற் கொள்ளப்பட்ட சதியே இது.

இலங்கை சீன நட்புறவை முறித்தெறிந்தால் தான் - இலங்கையானது ஏகாதிபத்திய 'செருப்பு நக்கிகளை'க் கொண்ட ஆசியப் பொதுச் சந்தையில் சேர்ந்து ஏகாதிபத்தியங்களை மனம் குளிரச் செய்ய முடியும்என்ற நோக்கோடு பின்னப்பட்டதே இச்சதி.

இச் சதியை நியாயப் படுத்த நடத்தும் அமைச்சர்களினதும், அரை நிர்வாணப் பத்திரிகைகளினதும் பிரச்சாரச் சதிகளுக்கு எமது நாட்டு மக்கள் ஏமாறப் போகிறார்களா? இன்றேல் அவர்களையே ஏமாற்றி விடப் போகின்றார்களா?

—'கட்டபொம்மு'

# தனித் தமிழ் நாடாம்! பொன்னன் கட்சி டூப்பு!

அரிசி வெட்டாலும், விலைவாசி உயர்வாலும், தலையேறிய சுமையாலும், மக்களெல்லாம் ஒட்டிய வயிற்றுடன் வாடியிருக்க-

கொழும்புச் சீமையிலே சிங்கார வாழ்வெய்தி, 'ஏர்கண்டிஷன்' பங்களாவில் ஆயாசமாகத் தூங்கியெழுந்து, வழக்குத் தொழிலையும் வற்ருமல் கவனித்து விட்டு- 'மாதம் மும்மாரி மழை பொழிகிறதா'- என்று கேட்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த 'எம்பி' பொன்னம்பலத்தை பன்னீரில் குளிப்பாட்டி, குளிர் சந்தனம் பூசி, வெண்சாமரம் வீசி '22-வது காங்கிரஸ் கட்சி மாநாடு' என்ற பெயரில் ஒரு செப்படிவித்தையும் நடத்தப்பட்டிருப்பது தமிழ்ச்சாதி அறியாத 'புதினம்' அல்ல.

யு. என். பி. தமிழ்த் தினசரிகளின் முழுப்பக்க விளம்பரங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த 'மாநாடு' வெறும் வெத்துவேட்டாக முடிந்து விட்டது குறித்து 'தமிழ்ச்சாதி'க்கு வேதனையில்லை.

எங்கும் வாய்திறக்கவில்லை. இப்பிரச்சினைகள் பற்றி வாய் திறக்க ஒரு வேளை 'பீஸ்' கேட்டாலும் கேட்பார். ஐயோ வேண்டாம். மக்களின் ஜீவாதார பிரச்சினைகளை மறைத்து வேறு பிரச்சினைகள் மூலம் தமிழ் மக்களை திசைதிருப்பி விட பொன்னம்பலம் தற்போது முயற்சித்திருக்கிருர். எல்லாமே தன் கட்சி லாபத்தைக் கருத்தில் கொண்டு தான்.

டத்துக்குள் தானே இருக்கின்றன. எனவே ஆளும் மட்டத்தில் இவைகளைப் பேசி முடிவு காண முடியுமா? நினைத்தால் இந்த ஆளும் கட்சிகளுக்கு முடியாதது எதுவும் இருக்க முடியுமா? ஆனுல் நினைத்தால் தானே? தமிழ் மக்களின் உரிமைகளை ஆதிமுதல் பறித்து வந்த யு.என்.பி. இன்று தமிழ் மக்களின் உரிமைகளை முழுசாகக்கொடுத்து விடுமா? அதை இவர்கள் முட்டினுலும் யு. என். பி. யிடம் இருந்து பெற்றுவிட முடி

## பொய்யிலே பிறந்து
## பொய்யிலே வளர்ந்த
## பொன்னன் கட்சி பிதற்றல்!

ஆனுல் இந்த மாநாடு ஏமாத்து - சுத்தமாத்து - பம்மாத்துப் போன்ற தாரக மந்திரங்களுடன் முடிவுற்றது குறித்துத்தான் தமிழ் மக்கள் வேதனை அடைந்துள்ளனர்.

இந்த மாநாட்டில் ஆனைப் பந்தித் தலைவரும், பணக்கார தொந்திகளின் காவலருமான 'எம்பி' பொன்னம்பலம் ஆற்றிய உரை அவர் வழக்குத் தொழிலில் ஆற்றும் 'தொகுப்பு உரை'யைப் போன்று இருந்தது.

### வயிற்றிலடிப்பு!

கருத்தளவில், கொள்கையளவில், பொருளாதார ரீதியில்- யு.என்.பி. தலைவர்கள் சிங்களப் பகுதிகளில் ஆற்றும் 'முதலாளித்துவ உரை'யை இவர் தமிழில் 'குளறி'யுள்ளார். அவ்வளவுதான். எனவே அதற்கொரு விமர்சனம், விளக்கம் தேவையற்றது. யு.என்.பி.யின் கொள்கை எதுவோ - அதுவே பொன்னம்பலத்தின் முதலாளித்துவ காங்கிரஸ் கட்சியின் கொள்கையாகும். இன்று நாட்டு மக்கள் படுபாதகமாக வயிற்றிலடிக்கப் பட்டுள்ளார்கள். குறைந்த ஊதியம், உயர்ந்த விலைவாசி, மக்களைத் தலையில் அடித்துள்ளது. இதற்குப் பொன்னம்பலமும் உடந்தை! அவரும் ஆளும் கட்சி நபர் தானே? பொன்னம்பலம் மந்திரியாக விருக்கும் போது தான் 25 சதம் விற்ற அரிசி 70 சதமாக கூட்டப்பட்டது. இன்று திருச்செல்வம் மந்திரியாகவிருக்கும் போது தான் மக்களின் ஒருகொத்து அரிசியும் வெட்டப்பட்டுள்ளது. என்று 'தமிழ்த்தலைவர்கள்' மந்திரிகளாகின்ருர்களோ அன்றெல்லாம் தமிழ் மக்கள் உட்பட சகல மக்கள் வயிற்றிலும் 'பெரும் இடி' விழுந்தே வந்துள்ளது. வருகிறது. தமிழ் தலைவர்கள் என்போர் சுரண்டும் பணக்கார, முதலாளி வர்க்கத்தின் ஏவர்கள், காவலர்கள்! ஏழைகளின் கழுத்தை நெரிப்பதில் வல்லவர்கள். இது அவர்கள் வர்க்கக் கொள்கை. எனவே தான் வாழ்க்கைச்செலவு உயர்வு பற்றியெல்லாம் பொன்னம்பலம்

### வட்ட மேசை!

'எம்பி' பொன்னம்பலம் எதைமறந்தாலும் இந்த வட்டமேசை பற்றி எப்பொழுதும் மறப்பதில்லை. தேர்தல் காலத்தில் 'என்னை அனுப்புங்கள் மூன்று மாதத்தில் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்து விடுகிறேன் என்ருர். இன்று ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாகப் போகிறது. இன்று உரிமையையும் காணேம், எருமையையும் காணேம். இவரால் எதுவும் முடியவுமில்லை. இந்நிலையில் தனது கையாலாகாத் தனத்தை மறைக்க மீண்டும் வந்து 'வட்டமேசை மாநாடு' தான் ஒரே வழி - அதை தமிழரசார் எதிர்க்கின்றனர்'' என்று 'வஜனம்' பேசியுள்ளார். எதற்கு வட்ட மேசையும் மாநாடும்? இன்று யு. என்.பி, தமிழரசு, தமிழ் காங்கிரஸ் எல்லாமே ஆளும் வட்

யுமா? முடியவே முடியாது. எனவே தான் மூன்று மாதங்களில் பெற்றுத்தந்து விடுவேன் என்று சொல்லிய பொன்னம்பலம் தான் சொன்னவற்றை பெற்றுத் தர முடியவில்லையாகையால் இப்படி வட்டமேசை முகாரி பாடுகிருர். வல்வெட்டித்துறையில் பொலிசார் கொலை செய்த ஒரு உயிர் சம்பந்தமாக அரசாங்கத்தை வற்புறுத்தி, அரசாங்கத்தால் வழக்குத் தொடர வைக்க முயன்று தோற்றுப்போன பொன்னம்பலம் உரிமைகளை பெற்றுத் தந்துவிட முடியுமா? எதுவுமே முடியாவிட்டால் ஆளும் கட்சிகளில் ஒன்றென்ற நிலையில் ஏன் இருப்பான்? அரசாங்கத்தை விட்டுவெளியேறி எதிர்ப்புத் தெரிவித்திருக்கலாமே? அதற்குப் பொன்னம்பலத்துக்கு விருப்பமில்லை.

### வாய்ச் சவடால்!

யு. என். பி. மெதுமெதுவாகத் தமிழர்களின் உரிமைகளை அடித்துதின்று மென்று வருகிறது. 'தமிழ்த் தலைவர்களின்' உதவியுடன் இன்று ஆட்சி அமைத்திருக்கும் யு.என்.பி. இப்படி நடந்து கொள்கிறதென்றுல் தன் சொந்தப்பலத்தில் நின்று யு.என்.பி. தனியாட்சி அமைத்திருந்தால் இன்று எவ்வளவு கொடுமைகள் நடந்திருக்கும். பழைய படி 'சண்டித்தன' கண்டியாத்திரைகள் தான் நடந்திருக்கும். ஆனுல் பொன்னம்பலத்தின் நினைவெல்லாம் வேறெதைப் பற்றியும் இல்லை. எப்படி தமிழரசுக் கட்சியை அடித்துத்தின்பது என்பது தான் அவரது தற்போதைய கனவு. "தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு தமிழரசுக் கட்சியினரே காரணம். அவர்களுக்குப் பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணமேயில்லை'' என்றுதிருவாளர் 'எம்பி' பொன்னம்பலம் மாநாட்டில் கூறியுள்ளார். அப்படியாஞல் யு. என். பி. யினர் தமிழர்களின் உரிமைகளைத் தரத் தயாராகவுள்ளனரா? தமிழரசுக் கட்கியினர்தான் அதைத் தடுத்துவைத்து உள்ளனரா? 'எம்பி' பொன்னம்பலம் இன்றைன்றையும் கூறியுள்ளார். அதென்னவெனில்: "தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டால் தமிரசுக்கட்சிக்கே இந்த நாட்டில் இடமில்லாமல் போய்விடும். அந்தக் கட்சியை வைத்துத்தொங்கிக் கொண்டிருப் பவர்களுக்கும் வேலையில்லாமல் போய்விடும் அதனுலேயே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளுக்கு தமிழரசார் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருக்கின்றனர்'' என்றும் கூறியுள்ளார். தமிழர்களின் உரிமைகள் கிடைப்பதை தமிழரசார் தடுக்கின்றனராம். ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைத்துவிட்டால் தமிழரசுக்கட்சிக்கு வேலையில்லாது போய் விடும் என்ற பயத்திஞலாம். சரி! அப்படியெனில் தமிழ் மக்களின் உரிமைகள் 'கிடைத்த'பின் பொன்னம்பலத்துக்கு என்ன வேலையிருக்குமோ? போகட்டும் 'எம்பி' பொன்னம்பலம் இப்படி செய்தால் என்ன? டட்லியுடன் பேசி தமிழ் மக்களின் உரிமைகளை உடன் கொடுக்கச் சொல்லி தமிழரசுக்கட்சியை வேலையில்லாமல் ஆக்கியிருக்கலாமே? அதன்பின் தனது அபேட்சகர்களை சகல தொகுதிகளுக்கு நிறுத்தி 'ஏகமனதாக' தெரிந்தெடுக்கப்படச் செய்யலாமே? இந்த நல்ல காரியத்தை ஏன் 'எம்பி' பொ[illegible]னம்பலம் செய்யவில்லை. பத்து பதினைந்துபேருட[illegible]ாராளு மன்றம் செ[illegible] மந்தி[illegible] பேசவேண்டும்[illegible]காக பொன்னம்பலம் எப்படியெல்லாம் 'பம்மாத்து' விடுகிருர்.

> காலமெல்லாம் ஏமாறி
> உடம்பெல்லாம் தழும்பேறி,
> ஏமாந்த மக்களுக்கு
> சுடுகாட்டு அழைப்பு!

### காக்கை வன்னியன்!

"அன்று திரு. பொன்னம்பலத்தை தமிழர்களைக் காட்

—6-ம் பக்கம் பார்க்க

# 'சிவசேஞ' கொலை வெறி!
## தென்னிந்தியரை எதிர்த்து!
### ராமமூர்த்தி, அண்ணத்துரை கண்டனம்!

'சிவசேஞ' என்ற வட இந்திய வானரங்களின் இனவெறிச் செயல்களை முன்பு 'தீப்பொறி' விரிவாக விளக்கியிருந்ததை யாவரும் அறிவர். இன்று இச் சிவசேஞவின் கொலைவெறிஉச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

சமீபத்தில் 'பசுவதை ஒழிப்பு' என்ற பெயரில் இச் சிவசேஞ முஸ்லிம் மக்களை எதிர்த்து பல அட்டூழியங்களையும், கொடுமைகளையும் செய்தது காங்கிரஸ் மந்திரிகள் சிலரின் ஒத்துழைப்புடன்.

இந்த 'பசுவதை ஒழிப்பு' இயக்கத்திற்கு அமெரிக்க டாலர் உதவிகள் கிடைத்திருந்தன என்று இந்திய ராஜாங்க விசாரணைக்கமிஷன் ஒன்று சமீபத்தில் கூறியிருந்ததையும் யாரும் அறிந்திருக்க முடியும்.

டில்லி அரசாங்கத்தில் தென்னிந்திய துவேஷ மூட்டும் மந்திரிகள் உளர். காங்கிரஸ் கட்சியின் தீவிர வலதுசாரிக் கும்பலுடன் இச் சிவசேஞவுக்குத் தொடர்பு உண்டு. அந்தவகையில் மத்திய மந்திரிகள் மொரார்ஜி தேசாய், சாவன் போன்றவர்கள் இவ் வியக்கத்திற்கு மறைமுக ஆதரவு தந்து கொண்டிருக்கிருர்கள். மத்திய மந்திரிகள் சிலர் இச்சிவசேஞவின் செயல்களைக் கண்டிப்பதாக சமீபத்தில் அறிக்கைகள் விட்டிருப்பது தென்னிந்திய மக்களைச் சமாதானம் செய்வதற்காகவே. மத்திய காங்கிரஸ் அரசாங்கம் இச் 'சிவ சேஞ'வுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

பம்பாயில் தென்னிந்தியரான கிருஷ்ணமேனனை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகருக்கான தேர்தல் பிரச்சாரங்களை பகிரங்கமாக 'சிவசேஞ'வே நடாத்தியிருக்கிறது. அத்துடன் 'தென்னிந்தியனுக்கு' வோட்டுப் போடுபவர்களைக் கொல்லுவோம் என்றும் மிரட்டியிருத்தார்கள்.

இன்று இச் 'சிவசேஞ'வின் தென்னிந்திய வெறி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. பம்பாயில் தென்னிந்தியரின் வீடுகள் தீவைக்கப்படுகின்றன. தென்னிந்தியர்கள் கண்ட கண்ட இடங்களில் தாக்கப்படுகிருர்கள். தெருக்களில் செல்லும்போது துரத்தப்படுகின்ருர்கள். இதைப் போன்ற முஸ்லிம் எதிர்ப்பையும், தென்னிந்திய எதிர்ப்பையும் தான் காந்தியின் கொலைக்குக் காரணமாகவிருந்த ஆர்.எஸ்.எஸ். கட்சி செய்து வந்தது. இன்று அக் கட்சிக்குத் தடையானபடியால் ஆர்.எஸ்.எஸ். கட்சியில் இருந்தவர்கள் இன்று 'சிவசேஞ' விலும், 'ஜனசங்'கிலும் அங்கம் வகிக்கின்றனர்.

இச் 'சிவசேஞ' வின் பாசிஸ நடவடிக்கைகளையிட்டு 'மனம்

—6-ம் பக்கம் பார்க்க

# பிரதமருக்கு நேரமில்லை!
# என்னத்தைக் கிழிக்கிறார்!

தீப்பொறி

உண்மை, நேர்மை, பயமின்மை

வல் வெட்டித்துறையில் ஆர். சிவஞான சுந்தரம் என்ற வாலிபரை பொலிசார் சுட்டுக் கொலை செய்தது சம்பந்தமாக, தம்மை அடிக்கடி பேட்டி கண்டு தலைசொறிந்த சமட்டிப் பிடாரிகளிடமும், பொன்னம்பலம் கட்சியினிடமும் ஜனநாயகப் பிதாவான பிரதமர் திருவாளர் டட்லி சேனநாயக்கா கமிஷன் அமைக்கப்படும், விசாரணை நடத்தப்படும், கோர்ட்டு விசாரணை முடியட்டும், அட்டோர்னி ஜெனரல் அறிக்கை தரட்டும் என்றெல்லாம் கூறி ஏமாற்றி வந்தார்.

தாம் ஏமாற்றப்படுவதை யறிந்த [illegible]ப்பிடாரிகளும் [illegible]க்கத் தைரிய[illegible] தலையைச் சொறிந்[illegible]றிந்து வந்தும் போயும் கொண்டிருந்தார்கள்.

இன்று கோர்ட்டு விசாரணை முடிந்து அட்டோர்னி ஜெனரல் அறிக்கையும் தந்துவிட்டார். முடிவு வழக்குமில்லை. விசாரணையுமில்லை. அதைக் கேட்கப் போனவர்களின் விலாசமுமில்லை. பேச்சுமில்லை. மூச்சுமில்லை.

அப்படியானல் எல்லாமே முடிந்து விட்டதா? முற்றும் அற்றுப் போய்விட்டதா? பொலிஸ் தரப்பில் செய்யப்பட்டிருக்கும் கொலை தட்டிக்கழிக்கப்பட்டிருப்பதுஇது முதல் முறையல்ல. பொலிசாரையும், முப்படைகளையும் நம்பியே ஆட்சிபுரிய வேண்டும் என்ற 'பரிதாப' நிலையிலிருக்கும் இந்த 'மக்கள் அரசாங்கம்' பொலிசாரைக் காட்டிக் கொடுக்கவோ, தண்டிக்கவோ விரும்ப வில்லையென்பது இதிலிருந்து தெரியவருகிறது.

அப்படியெனில் இந்த நாட்டில் 'நீதி' இருக்கிறது தானா? இன்றேல் இறந்தொழிந்து விட்டதா?

இன்று கொலைகாரர்கள் பொலிஸ் உடையில் சுதந்திரமாக உலாவுகிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கிடைத்தாலும் கிடைக்கலாம்.

தேர்தல் காலங்களில் ஜன நாயகம் பற்றியெல்லாம் வாய்கிழியக் கத்திய எமது பிரதமர் டட்லி சேனநாயக்கா இன்று என்ன சொல்கிறார் தெரியுமா?

தற்போது பாராளுமன்றத்தில் வல்வட்டித்துறை சம்பவம் சம்பந்தமாகக் கேட்கப் பட்ட கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கையில்: 'வல்வட்டித்துறை துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக சமீபத்தில் பொலிஸ் அறிக்கையொன்று தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், நேரமில்லாமையால் தாம் அதனை இன்னும் வாசிக்கவில்லை' என்றும் கூறியிருக்கிறார்.

## ஜனநாயகப் பிதாவின் ஜனநாயகம் சோதாவா?

ஒரு நாட்டின் பிரதமருக்கு, அதுவும் ஜனநாயகப் பிதாவான பிரதமருக்கு பொலீசார் செய்த துப்பாக்கிக் கொலை சம்பந்தமான அறிக்கையைப் படிக்க நேரமே இல்லையாம். சம்பவத்தின் முக்கியத்தை உணர்ந்திருந்தும் பிரதமர் வேண்டுமென்றே விஷயத்தை ஊதாசீனம் செய்கிறார் போலுள்ளது.

எமது பிரதமருக்கு உண்மையிலேயே இதைப் படிக்க நேரமில்லை யென்றால் அவர் என்னத்தைத்தான் கிழிக்கிறாரோ!

'விவசாயம்'! விவசாயம் என்று பிரதமர் ஊர் சுற்றுகிறார். அதற்குத்தான் காணி மந்திரியும், விவசாய மந்திரியும், உணவு மந்திரியும் இருக்கின்றனரே. இவர்களுக் கெல்லாம் மக்கள் வரிப் பணத்திலிருந்து ஆயிரக்கணக்கில் சம்பளம் கொடுத்து சும்மா வைத்துக் கொண்டு, பிரதமர் தன் வேலையைச்செவ்வனே செய்யாமல் 'விவசாய சுற்றுலா' நடத்திக் கொண்டிருப்பது ஏன்?

உபதேர்தல்களில் யு.என்.பி அபேட்சகர்களுக்காக ஊருக்கு ஊர் போய் கூடாரமடித்து பிரச்சாரம் செய்ய பிரதமருக்கு நேரமிருக்கிறது, காலமிருக்கிறது, விருப்பமிருக்கிறது, ஆனால் பொலிசார் செய்து விட்ட துப்பாக்கிக் கொலை பற்றிய அறிக்கையைப் படிக்க மட்டும் எமது ஜனநாயகப் பிதாவுக்கு நேரமில்லை.

அதிலும் பிரதமரிடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் அறிக்கை யாரின் அறிக்கை தெரியுமா? பொலிசாரின் அறிக்கையாம். கொலை செய்த பொலிசாரே அறிக்கை கொடுத்துள்ளார்களாம் பிரதமரிடம். எனவே அந்த அறிக்கையையும் அவர்கள் 'கொலை' செய்து தான் கொடுத்திருப்பார்கள் என்பதை யார் தான் அறிய முடியாது.


தொடம்பே முதலாளியை பொலிஸ் கட்டடத்தில் வைத்துக் கொன்றபின், வெளியே தூக்கி வீசிவிட்டு 'யன்னலால் வெளியே குதித்து இறந்துவிட்டார்' என்று கூறிய பொலிசாரை நாட்டுமக்களுக்குத் தெரியாதா என்ன?

அதைப் போன்று இந்த யு. என். பி. பொலிசாரின் அறிக்கைகள். பற்றி யாருக்குமே அக்கறையில்லை. பிரதமருக்கு அக்கறை இருக்கலாம். ஏனெனில் அவர் பொலிசாரின் தயவில் தான் ஆட்சி நடத்த வேண்டியிருக்கிறார். எனவே அவருக்கு பொலிசார் செல்லப் பிள்ளைகள். அவர்கள் நாட்டு மக்களை கொல்லலாம். அதற்காகப் பதவி உயர்வும் கிடைக்கப்படலாம்.

ஆனால் தற்போது உள்ள பிரச்சினை பொலிஸ் அறிக்கைப் பிரச்சினையல்ல. மாஜிஸ்ரேட் கோர்ட் இதை 'கொலை' என்று தீர்ப்பளித்திருக்கிறது, எனவே சம்பந்தப்பட்ட 'கொலைகாரப் பொலிசாரை' உடன் கைது செய்து காவலில் வைத்து சுப்ரீம் கோர்ட்டுக்கு இவ் விஷயத்தைப் பாரப்படுத்த வேண்டும் என்பது தான். போலி ஜனநாயகப் பிதாவே! ஏழுகட்சி ஆட்சியே பதில் என்ன?

### 7 அமெரிக்க விமானங்கள்
### வியட்நாம் வீரர்கள் வீழ்த்தினர்!

வடவியட்நாம் தலைநகரான ஹனோயின் வானப்பிரதேசத்தில் நடைபெற்ற விமான யுத்தித்தில் '7 அமெரிக்க போர் விமானங்கள் வியட்நாம் வீரர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. தென் வியட்நாமின் அமெரிக்க பொம்மை ஆட்சியும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் சேர்ந்த வியட்நாம் மக்கள் மீது நடத்



தும் கோர யுத்தத்தில் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அவர்களுக்கு வெற்றி கிடைக்கப் போவதில்லை என்பது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனின் வியட்நாம் யுத்தக் கொள்கை முறையைக் கண்டித்திருக்கும் செனட்டர் ராபர்ட் கென்னடி "கம்யூனிஸ்ட் வியட்நாம் மீது என்ன தான் குண்டு வீச்சு நடத்திய பொழுதிலும் அமெரிக்காவால் வெற்றி பெற முடியாது" என்று கூறியிருப்பதாகவும் அமெரிக்க பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

# முகமதுக்கு கருப்புக் கொடி!
# முன்னணிக்கு மூஞ்சியில் கரி!

ஆகஸ்ட்டு மாதம் அமைச்சர் எம். எச். முகமது மாத்தளைக்கு மாக்ஸிய எதிர்ப்பு முன்னணியின் கூட்ட மொன்றினுக்குச் செல்லும் வழியில் அவருக்கு, யு.என்.பி.யின் கோட்டையும், 'பன்றி இறைச்சிக் கதை புகழ்' ஹமீதின் தொகுதியுமான அக்குறணையில் வைத்துக் கருப்புக் கொடி காட்டி அவரின் வருகைக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதைத்தவிர வழி நெடுகிலும் முஸ்லிம்கள் கருப்புக் கொடி காட்டியதுடன் வீடுகளின் முகடுகளிலும் கருப்புக் கொடி தொங்க விட்டிருந்தனர். சில இடங்களில் யு.என்.பி. பொலிஸ் இதனை அகற்றின. இதைவிட நகைச்சுவைதான் "மக்கள் அரசாங்கத்தின் (!)" மந்திரி தன் மக்களிடம் செல்லும் போது பொலிஸ்காவலுடன் சென்றதாகும். என்னே மக்கள் ஆதரவு!

மந்திரி தேர்தல் காலத்தில் மாத்தளை முஸ்லிம்கள் யு.என்.பி. திரும்பி வர உதவி செய்தால் முஸ்லிம் மக்களுக்கு காணியும், ஆயிரக் கணக்கில் பணமும் வீடுகட்டக்கொடுப்பதாக கூறியதையும், முஸ்லிம் வாலிபர்கள் மத்தியில் நிலவும் வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க கைத்தொழில் நிலையம் நிறுவுவதாக கூறியதையும், அவரின் வேறு பல வாய்ச் சவடால்களையும் நினைவூட்டி பகிரங்கக் கடித மொன்றினை 'மாத்தளை இஸ்லாமிய சோசலிச முன்னணி' தயாரித்து மக்கள் மத்தியில் சமர்பித்தது.

இப்படியாக மாத்தளையிலும், அக்குறணையிலும் முஸ்லிம்கள் மந்தி(ரி)க்கு வரவேற்பு நல்கினர். ஐயோபாவம்!

## இந்தியாவின் உளவு!
## பாகிஸ்தான் உதைப்பு!

பிற நாடுகளிலிருக்கும் இந்திய அதிகாரிகள், அந்தந்த நாடுகளில் திட்டமிட்ட உளவு வேலைகளைச் செய்வது பரவலாகி வருகிறது. டில்லி அரசாங்கத்தின் மறைமுக கட்டளைக்கிணங்கவே அவர்கள் அங்ஙனம் நடந்து கொள்கிறார்கள். சமீபத்தில் பாகிஸ்தானிலிருக்கும் இந்திய தூதரகத்தின் அதிகாரிகள் மூவர் 'திட்டமிட்ட உளவு' வேலையில் ஈடுபட்டிருக்கும் போது பிடிப்பட்டுள்ளார்கள். பாகிஸ்தானின் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தஸ்தா வேஜுக்களைத் திருடியதாயும், இராணுவ வட்டாரங்களைப் படம் பிடித்ததாகவும் இவர்கள் மேல் குற்றஞ்சுமத்தப்பட்டு, இவர்களை உடன் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறி விடும்படி பாகிஸ்தான் அரசு கட்டளை பிறப்பித்துள்ளது. இதைப் போன்றே சீனாவிலும் இந்திய அதிகாரிகள்இராணுவ இடங்களைப் படம் பிடித்து உளவு செய்ததற்காக அவர்களை சீனா வெளியேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆலயப் பிரவேசமும்! செனட் பிரவேசமும்!

## சமாதான நீதவான் பட்டமும் செனட் சபைப் பதவியும் மனித உரிமைக்கு ஈடாகுமா?

தமிழ் மக்களுக்குள் ஒரு சாராரின் சகல மனித உரிமைகளும் மறுக்கப் படுவதானது 'ஆண்டவனின் கட்டளை' அல்லாவிட்டாலும், நிலப்பிரபுத்துவ ஆண்டான்களின் கட்டளையாக அக் கொடுமைகள் அமுல் செய்யப்பட்டு வருவது யாரும் அறியமுடியாத பரம இரகசியமல்ல.

ஆண்டாண்டுகாலமாக அடக்கியொடுக்கப் பட்டு வந்த மக்களை 'தேர்தல்கால' சாதி ஒழிப்புக் கட்சிகளான தமிழரசும், தமிழ் காங்கிரஸும் இன்று நடுத்தெருவில், நட்டாற்றில் கைவிட்டமை யாரும் புரிய முடியாத புதுமையுமல்ல.

ஆனுல் நசுக்கப்பட்ட மக்களுக்காக வென்று சங்கங்கள் அமைத்துச் சலுகைகள் பெற்று வயிறு கழுவும்-'மகாசபைகள்' இன்று நசுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலை நசுக்க முனைவது தான் புதுமையாகவிருக்கிறது.

### திருவள்ளுவர் மகாசபை

முதலாவது: திருவள்ளுவர் மகாசபை என்ஞெரு சங்கம். நசுக்கப்பட்ட மக்களின் பெயரால் உயிர் வாழும் ஒரு சங்கம். இது தமிழரசுக் கட்சியிலும் ஒரு அங்கம். இதன் தலைவர் ஒரு கத்தோலிக்கர். இவருக்குத் தமிழரசுத் தலைவர்கள் 'சமாதான நீதவான்' பட்டத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். இப்படி சொந்தப் 'பிழைப்பு' களுக்காகச் சங்கம் வைத்திருப்பவர்கள் நசுக்கப்பட்ட மக்கள் உரிமைக்குரல் எழுப்பும் போது 'இது கம்யூனிஸ்டுகளின் தூண்டுதல்' என்றுதமிழரசுக் கட்சியின் தூண்டுதலின் பேரில் அறிக்கைகள் விடுகின்றனர். இவர் கத்தோலிக்கர் என்ற வகையில் கத்தோலிக்க ஆலயங்களுக்குள் இவரால் போகமுடியும் வணங்க முடியும். ஆனுல் நசுக்கப்பட்ட இந்து மக்களின் கோரிக்கையை இவர் 'நையாண்டி' செய்கிறுர். தமிழரசுக் கட்சி இவருக்குப் பெற்றுத் தந்த 'சமதான நீதவான்' பட்டத்திற்காக இவர் நன்றிக்கடன் செலுத்த வேண்டுமல்லவா? அதனுல் தான்.

### மக்கள் முன்னேற்ற மன்றம்

இரண்டாவது: மக்கள் முன்னேற்றமன்றம் என்ஞெரு சங்கம். இதுவும் தமிழரசுக் கட்சியின் ஒரு அங்கம். இதன் தலைவரும் ஒரு கத்தோலிக்கர். இவருக்கும் தமிழ்ரசுக் கட்சித் தலைவர்கள் 'சமாதான நீதவான்' பட்டத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். நசுக்கப்பட்ட மக்களின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கமும் நசுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலில் அக்கறை கொள்ளவில்லை. மாருக நசுக்கப்பட்ட மக்களின் உரிமை எழுச்சியை எதிர்த்து இவரும் பத்திரிகைகளில் அறிக்கை விட்டுள்ளார். தமிழரசுக் கட்சி எதைச் சொன்னதோ அதையே இவரும் அப்படியே தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நசுக்கப்பட்ட மக்களின் உரிமை எழுச்சியானது ஒரு அரசியல் கட்சியின் தூண்டுதலின் பேரில் ஏற்பட்டது என்பது இவர்களது ஏகோபித்த, ஏகமனதான கருத்து.

நசுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகள் பற்றி நாம் வற்புறுத்தும் போது அது 'தூண்டுதல் குற்றம்' என்று வியாக்கியானம் செய்யும் இவர்கள்- அக்குற்றச்சாட்டுக்குப் பயந்து நாம் மேலும் மேலும் நசுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வற்புறுத்த மாட்டோம் என்று நினைக்கிருர்கள் போலும். அதை இவர்களது அறியாமை என்றே சொல்ல வேண்டும்.

### சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி!

மூன்ருவது: சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியாகும். இதுவும் நசுக்கப்பட்ட மக்களின் பெயரால் அமைக்கப்பட்ட முன்னணியேயாகும். முன்பு இடதுசாரி அங்கமாக 'சிறுபான்மைத் தமிழர் மகாசபை' இருந்தது. இதன் தலைவராக திரு. எம்.சி. சுப்பிரமணியம் இருந்தார். இந்த 'மகாசபை'யின் விஸ்தரிப்பிலேயே சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி உருவாகியது. உரிமைபோருக்கு 'கட்சி அரசியல்' கூடாது என்ற வாதத்திலேயே சிறுபான்மைத் தமிழர் முன்னணி உருவானது. தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவரும், நசுக்கப்பட்ட மக்கள் 'சார்பாக' முன்பு செனட்டர் பதவியைப் பெற்றிருந்தவருமான திரு. நல்லையாவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் செனட்டர் பதவிக்கு மனுப்பண்ணியிருந்தவருமான திரிபுவாதக் கட்சியைச்சேர்ந்த திரு. எம். சி. சுப்பிரமணியமும் இந்த சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு கூட்டுத்தலைவர்களானுர்கள். இருவரும்இரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆனுல் உரிமைப் போருக்கு 'கட்சி அரசியல், தேவையில்லை யென்று கூறுபவர்கள். செனட்டர் பதவிகளுக்கும், பிற சலுகைகளுக்கும் 'கட்சி அரசியல்' தேவையில்லைத்தான். ஆனுல் மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு 'கட்சி அரசியல் முன்னிற்காமல் எதுவும் முடியுமா? போகட்டும். கூட்டுத் தலைவர்களாக வியங்கும் இவர்களது கூட்டு நோக்கம் என்ன? மீண்டும் செனட்டர் பதவிகளுக்கு மனுப்பண்ணுவதே! நசுக்கப்பட்ட மக்கள் என்ற 'லேபலில்' மக்களைத் தம் பின்னுல் சேர்த்து வைத்துக்கொண்டு முன்னணி வைத்திருக்கும்இவர்கள், அந்த மக்களுக்கு ஆலயப் பிரவேசம் முதல் பிற மனித உரிமைப் பிரவேசம் வரை கிடைக்காத நிலையில், அந்த 'நசுக்கப்பட்ட' மக்களுக்கு பிரதிநிதித்துவம் தர தங்களுக்கு செனட்சபைப் பிரவேசத்தைத் தரும்படி வேண்டுகிருர்கள்-இவர்களுக்குக்கிடைக்கும் செனட்சபைப் பதவிகளால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மனித உரிமைகள் கிடைத்துவிடுமா? திரு. நல்லையா செனட்டராகவிருந்தார். அவரால் மனித உரிமைகளைப் பெற்றுத்தர முடிந்ததா? அவருக்குச் சொந்த லாபங்கள் கிடைத்திருக்கலாம். ஆனுல் அடக்கப்பட்ட மக்களுக்கு மனித உரிமைகள் கிடைக்கவில்லையே?

இதைப் புரிந்தும் புரியாதவர்கள்போல் நடிக்கும் இவர்கள் தமக்குப் 'பதவி'கள் கிடைக்கவேண்டும் என்பதற்காக முன்னணிகளும், சங்கங்களும், மன்றங்களும் வைத்துக்கொண்டு காட்டிக்கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.

## சலுகைக் கும்பலின் கழுத்தறுக்கும் சதி!

இவர்களின் 'சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி' தமிழரசுக் கட்சியின் அங்கமாகவும், அதே வேளையில் பீட்டர் கெனமன் திரிபுவாதக் கும்பலின் அங்கமாகவும் விளங்குகிறது. வேடிக்கைத்தான்.

ஆனுல் தற்போது, நசுக்கப்பட்ட மக்கள் எழுச்சியுற்ற போது, அவர்கள் உரிமைக் குரல் கிளப்பிய போது இந்த 'முன்னணி'யும் தமிழரசுக் கட்சியின் அறிக்கையைத் தான் வாசித்தது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் நல்லையா இம் முன்னணியில் இருப்பதால் [illegible]ரசுக் கட்சியின் அறிக்கை[illegible] அவர் ஏற்றது [illegible] ஆனுல் இந்[illegible] இருக்[illegible] யின் எம். [illegible] மும் தமிழரசா[illegible] அறிக்கையை ஏற்று, அதை ஒத்த அறிக்கைகளை, பத்திரிகைப் பேட்டிகளைக் கொடுத்திருக்கிருரே. என்ன ஒற்றுமை? என்ன ஐக்கியம்? ஐக்கிய முன்னணியல்லவா? அதனுல் தான் இந்த ஐக்கியம் போலும் ஒற்றுமை போலும். செனட்டர் பதவிக்கான போட்டிகளிலும் இந்த ஐக்கியம் நீடிக்க வேண்டும் என ஆசிக்கிருேம். அதுபோக நசுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலை சாதிவெறியர்களைக்கொண்ட தமிழரசு தமிழ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் காட்டிக் கொடுத்து கழுத்தறுத்தது புதுமையில்லை. ஆனுல் நசுக்கப்பட்ட மக்களின் பெயரால் 'சங்கங்கள்' அமைத்து 'சலுகைகள்' பெறத்துடிக்கும் இவர்களும் 'இது அரசியல் தூண்டுதல்' என்று கூறியிருக்கிருர்களே? இன்று கொலையும் நடந்தேறியுள்ள நசுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக அறிக்கை விட்டார்களா? கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்த்து அறிக்கை விடுவதிலேயே கவனத்தைச் செலுத்தியுள்ளார்கள். செனட்டர் பதவிகளும், பிறபதவிகளும் வேண்டுமென்ருல் கம்யூனிஸ்ட் கட்சியைக் கண்டித்துத்தானே ஆகவேண்டும். நசுக்கப்பட்ட மக்கள் இதை உணர்வார்களாக!

## 7 வருட ஆட்சிக்கு 7 கட்சி ஆட்சி மனு!

ஐந்து வருடம் பாராளுமன்ற ஆட்சியில் நம்பிக்கை வைத்துள்ள ஜனநாயக'பிதா'வின் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள்—5 வருட ஜனநாயகத்துடன் 2 வருட ஜனநாயகத்தையும் கூட்டி 7 வருட ஜனநாயக ஆட்சி செய்தால் என்னவென்று யோசனை கூறியிருக்கிருர்களாம்.

வரவு செலவுத் திட்டம் கமிட்டி நிலையில் ஆராயப்பட்டபோது- பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை ஏழு வருடங்களாக நீடிப்பதை தான் ஆதரிப்பதாக ராஜாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். மேலும் அவர் பேசுகையில் ''யுத்த காலங்களில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஆயுள்காலம் 10 வருடங்கள்வரை நீடிக்கப்பட்டிருக்கிறது'' என்றும் கூறியுள்ளார்.

ராஜாங்க அமைச்சர்-இலங்கையில் தற்போது 'யுத்த காலம்' ஏற்பட்டிருக்கிறது என்று நினைத்திருக்கிருரோ என்னவோ? அதனுல்தான் அவசரகாலச் சட்டம் இன்னும் தளர்த்தப்படாமலிருக் கிறது போலும். அவசரகால நிலையைத் தளர்த்திஞல் மக்கள் 'யுத்தம்' செய்து ஆட்சியைக் கவிழ்த்துவிடுவார்கள் என்று அமைச்சர்கள் அஞ்சுகின்றனர் போலும். அதனுல்தான் அவசரகால நிலைமையைத் தொடர்ந்து வைத்திருந்து, தேர்தலும் வைக்காமல் மேலும் இரண்டோ, இருபதோ ஆண்டுகளுக்கு ஆட்சியை நீடிக்க விரும்புகின்றனர் போலும். ஆனுல் அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் இலங்கையில் என்ன நடக்கும் என்று மந்திரிகளே நினைத்துப்பார்க்கமுடியாது.

## தொடருவோம் உரிமைப் போரை பணிவுருேம்; பதுங்க மாட்டோம்

— வசந்தன் —

ஆண்டவன் கோயிலுக்குள், நம்மை
அணுகவிட மாட்டோ மென்று
ஆண்டாண்டு காலம தாய்
அடிமைப் படுத்தி விட்டு
மாண்டு விடும் சைவநெறி
மண்ணுகிப் போமே யென்று
ஆண்டவனைச் சாட்சி வைத்து
உளறுகின்றீர் சீச்சீ வெட்கம்

தெய்வங்கள் உறையும் அந்தத்
திருவிடத்தில் நாம் நுழைந்தால்
பையவே எழுந்து தெய்வம்
பயந்து தான் ஓடிடுமோ?
ஐயகோ! தமிழன் பண்பு
இதுவானுல் அதையும் நீங்கள்
செய்துள்ள சதிதா னென்று
செப்புவோம் செகம் சிரிக்க

மதம் என்ன? சுரண்டுவோர்க்கு
முது சொத்தா! சீதனமா?
மதம் என்ருல் ஒரு சாராரை
மந்தைகளாய் மதிப்பது தான்
'மதமா மனிதனது திமிரா'!
மதத்துடைய ஆகமங்கள் இதுவானுல்
அதுவும் முழுப் போலியென்று
அறைந்திடுவோம். பெரு முரசம்

'பிறந்து விட்ட மக்களிலே
பேதங்கள் சிறிதும் இல்லை
இறையவனை உள்ளே சென்று
வணங்கிடவே உரிமை யுண்டு'
இறைவனின் நாமம் சொல்லி
இஃதினை மறுப்போர் இங்கே
குறையிது; முறையோ? வென்ருல்
நாஸ்திகராம் நம்மைப் பார்த்து.

மனிதனை மனிதன் தாழ்த்தும்
மதமொன்று இருக்கு மானுல்
இனியும் நாம் பொறுப்பதில்லை
இதுவெறும் பொய்யே யென்று
துணிவுடன் முழக்கம் செய்து
தொடருவோம் உரிமைப் போரை
பணிவுருேம் பதுங்க மாட்டோம்
பயமில்லை; ஜெயம் பெறுவோம்.



## தீப்பொறி இரு பதிப்புகள் முக்கிய அறிவித்தல்

எமது புரட்சிகர வார ஏடான 'தீப்பொறி' வெளியூர்ப் பதிப்பு - மலையகப்பதிப்பு என இருபதிப்புகளாக வாரம் தோறும் வெளிவர விருக்கிறது-என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம். இந்த வகையில் இரு பதிப்புகளும் தொடர்ந்து விசேஷமாக வெளியிடப்படும். இப்பதிப்புகள் வெளிவரும் தேதி இன்னும் ஓரிருவாரங்களில் அறிவிக்கப்படும்.

# லுணுவை பின்னணியில் மா......எதிர்ப்பு முன்னணி

## விசாரணை செய்யும் பொலிசாருக்கு மறைமுக இடமாற்றப் பயமுறுத்தல்!

மார்க்ஸிச எதிர்ப்பு முன்னணியினரின் தகிடுதத்தங்களை இந்த நாட்டு மக்கள் இன்று பரவலாக அறிய முடிகிறது. சுரண்டும் முதலாளித்துவ ஆட்சியை நீடிக்கவும், முஸ்லிம்கள் என்றென்றும் யு, என். பி. க்குப் பந்தம் பிடிப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவுமே இந்த மா... எதிர்ப்பு முன்னணி தொழில் அமைச்சர் முகமது அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மா... எதிர்ப்பு முன்னணியினருக்கு விலைவாசி உயர்வு பற்றியோ, வேலையில்லாத்திண்டாட்டம் பற்றியோ ஏழை எளிய மக்களின் வறுமையான வாழ்வு பற்றியோ கவலை இல்லை. அக்கறையும் இல்லை. இந்த நாட்டுமக்கள் என்ற வகையில் சகல கஷ்டங்களும் முஸ்லிம் மக்களையும் சாகடிக்கிறது என்றவர்கள் ஒரு நிமிடமும் நினைத்துப் பார்க்கவில்லை. இந்த மா... எதிர்ப்பினர் நினைத்துப் பார்ப்பதெல்லாம் சில பணம் படைத்த முஸ்லிம் புள்ளிகளை எப்படி மேலும் 'கொழுக்க' வைக்கலாம் என்பதைத்தான்.

அதனால் தான் தொழில் அமைச்சர் முகமதுவைத் தலைவராக தலையில் சுமக்கு மா.... எதிர்ப்பு முன்னணியினர்.... மதத்தின் புனிதம் என்றெல்லாம் கூப்பாடு போடும் இப்பீடைகள் சட்டவிரோத சூதாட்ட புக்கிகளை சட்டபூர்வமாக்கும் படி கோருகின்றனர். மீண்டும் தடை செய்யப்பட்ட குதிரைப் பந்தயங்களை ஆரம்பிக்கும் படி வேண்டுகின்றனர். இப் பாபத் தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள், ஈடுபட்டிருப்பவர்கள் பெரும் பணக்கார முஸ்லிம்கள் என்ற காரணத்தினால் தான் அவர்களுக்கு 'லாபம்' கிடைக்க பாவக் கூச்சலிடுகின்றனர். இஸ்லாம் சகல சூதாட்டங்களையும் எதிர்க்கிறது. ஆனால் இஸ்லாத்தைக் காப்பாற்றுவதற்கென்று நவீன பிறவி எடுத்திருப்பதாகக் கூறும் அமைச்சர் முகமதுவுக்கு இது தெரியவில்லை. அத்துடன் ராசீக் பாரீத்துக்கும் இது புரியவில்லை.

தற்போது இன்னுமொரு திடுக்கிடும் சம்பவத்தை அறியக் கூடியதாக விருக்கிறது. அதென்னவெனில் சமீபத்தில் நடைபெற்ற லுணுவை வாடி வீட்டுச் சம்பவத்தில் பெரும் மார்க்ஸிச எதிர்ப்பு முன்னணிப் புள்ளிகளும் பங்குபற்றியிருக்கின்றனராம்.

நிர்வாணமாக்கப்பட்ட இரு பெண்களுடன் தனியறையில் மார்க்ஸிச எதிர்ப்பு முன்னணிப் புள்ளியும் 'சரச' மாடிக் கொண்டிருந்தாராம். அத்துடன் நன்றாகத் 'தண்ணி'யும் போட்டிருந்தாராம், கட்டிலறையில் வைத்துக் கட்டிப் பிடித்தவாறே மார்க்ஸிச எதிர்ப்பை ஊட்டினார் போலும். அந்தோ பாவம்! இப்படித்தானா மார்க்ஸிச எதிர்ப்பு பிரச்சாரம் செய்ய வேண்டும்?

சகல பாவங்களையும் திரைமறைவில் செய்யும் இவர்கள்- 'மார்க்ஸிச எதிர்ப்பு முன்னணி ஒரு அரசியல் முன்னணியல்ல, மதம் சம்பந்தமான முன்னணியே அது என்று கூறிக் கொள்ளும் இவர்கள், தங்களது மத முன்னணிக்காக இப்படித்தானா சேவைபுரிவது?

செய்யும் அயோக்கியத்தனங்களையெல்லாம் மதப்போர்வையில் மறைத்து விடலாம் என்றிவர்கள் கருதிக் கொண்டிருந்தால் அக்காலம் மலையேறிவிட்டது என்றுதான்

—8-ம் பக்கம் பார்க்க

# தமிழருக்கு தமிழ் இரண்டாவது மொழி!

## ஆங்கில அடிவருடி பொன்னன் ஓலம்! தட்டிக் கேட்க ஆளில்லையா?

எம்பி... யற்... ரெ... ர் ... ரோகி என்றவர்கள் இ... கட்டாய நாடு கடத்தலைச் சட்ட நடவடிக்கை ஆக்குவதற்கு ஆதரவு கொடுத்துள்ளனர்" என்றும் மாநாட்டு மேடையில் 'முழக்கம்' செய்யப்பட்டிருக்கிறது. பொன்னம்பலம் அன்று துரோகிதான். ஆனால் இன்று? இலங்கை இந்திய [கட்டாய நாடுகடத்தல்] மசோதாவை பாராளுமன்றத்தில் பொன்னம்பலம் எதிர்த்தாரா? இல்லையே? பலமாக கைதூக்கி ஆதரித்தல்லவா இருக்கிறார். இந்நிலையில் பாராளுமன்றத்திற்கு வெளியே கட்டாய நாடுகடத்தலை எதிர்ப்பதாகக் கண்ணீர் விடுவது ஏன்? நடிப்பது ஏன்? செப்படிவித்தை செய்வது ஏன்? நாட்டுமக்கள் இன்றும் குழந்தைப்பிள்ளைகள் என்ற நினைப்பா பொன்னம்பலத்துக்கு? அன்று பொன்னம்பலம் தனது மந்திரிப் பதவிக்காக இலங்கை இந்திய மக்களை 'நாடற்றவர்கள்' ஆக்கியது உண்மைதான். துரோகத்திலும் துரோகம் தான் இன்று திருச்செல்வமும் மந்திரிப்பதவிக்காக 'நாடற்ற' மக்களை கட்டாய நாடுகடத்தலுக்கு உட்படுத்தி நட்டாற்றில் தள்ளியதும் உண்மைதான். துரோகத்திலும் துரோகம் தான். தமிழ் தலைவர்கள் அவர்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் என்று மந்திரியாகிறார்களோ அன்று இலங்கை இந்திய மக்களுக்கு எதிராக 'காக்கைவன்னிரா'கி விடுகிறார்கள்.

### ஆங்கில வருடி !

தமிழின் உரிமைகளுக்காகக் 'கண்ணீர்' சிந்தும் பொன்னம்பலம் மாநாட்டு மேடையில் ஆங்கில மொழிக்காக ,வீணீர்' சிந்தவும் தயங்கவில்லை. கல்லூரிகளையும், பாடசாலைகளையும் பழையபடி தனியாரே நடத்த அனுமதிக்க வேண்டும் என்று 'கத்திய' பொன்னம்பலம் தமிழ் மொழியை விட ஆங்கில மொழிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து 'முழங்கி' யுள்ளார். பொன்னம்பலம் ஒரு ஆங்கிலமோகி, ஆங்கில அடிவருடி, ஆங்கில மொழியால் வயிறுகழுவும் ஒரு ஆங்கில அடிமை. அவர் தன்னைப் போன்றே நாட்டு மக்களையும் பார்க்கிறார். தன்னைப் போன்றே தமிழ் மக்களும் ஆங்கிலத்துக்கு அடிமைகளாக விருக்கவேண்டும் என்று விரும்புகிறார். உயர்தரக் கல்விகள் ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். தமிழ் 'குசினி'க்குள் இருக்கட்டும் என்று அவர் சொல்லாவிட்டாலும் உயர் கல்வி தாய்மொழியில் இல்லையென்றால்-பின் தாய்மொழிக்கு 'அடுப்பு மொழி' அந்தஸ்து தானே இருக்கமுடியும். காங்கிரஸ் கட்சிதான் அவர் என்ற வகையில், அவரைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு முதல் ஆங்கிலம்-இரண்டாவது மொழிதான் தமிழ் இருக்கவேண்டும் என்கிறார். மூன்றாவது மொழி சிங்களமாக விருக்கட்டும் என்கிறார். தமிழர்களிடம் தமிழ் இரண்டாவது மொழியாக விருக்கட்டும் என்று சொல்ல எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்? இத்தகைய ஆங்கில அடிமைகள் நடத்தும் 'தமிழ்க் கூத்துக்கள்' எத்தனை நாட்களுக்குத்தான் தமிழ் மக்களால் ரசிக்கமுடியுமோ? பொன்னம்பலம் போன்ற ஆங்கில அடிமைகளைவிட, எந்த இன மக்களும் தமது தாய் மொழியிலேயே ஆரம்ப கல்வி முதல் உயர்கல்வி வரை இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். இதை ஆங்கிலத்தில் பிழைப்பு நடத்தும் பொன்னம்பலமும் அவரது 'அப்புக்காத்துமார்' கட்சியும் உணர்வது நலம்.

### தனி நாடு

'எம்பி' பொன்னம்பலம் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதில் வல்லவர். முதலில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் உரிமைகளை தமிழரசார் தடுக்கின்றனர் என்று கூறினார். பின்பு அதே மேடையில் தமிழர்களின் உரிமைகள் கிடைக்காவிட்டால் தமிழர்கள் ஒரே கொடியின்கீழ் திரண்டபின் 'தனித்தமிழ் நாடு' கோரிக்கை எழுப்பப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். முன்பு தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்களை ஏமாற்ற 'சமஷ்டிக் கோரிக்கை' வைத்ததைப் போன்று பொன்னம்பலமும் 'தனித்தமிழ் நாடு' கூச்சல் மூலம் தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்திருக்கிறார். இன்று ஆளும் கட்சியில் ஒன்றாக விருந்து யு.என்.பி.க்கு 'சோப்பு' போட்டும் 'நல்ல' மந்திரிப் பதவி கிடைக்காததால், 'தனித்தமிழ் நாடு' பெற்று அதற்கு பிரதமராக வரலாம் என்று கனவு காண்கிறார் போலும். எப்படியெப்படியெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றலாம் என்றறிந்து இப்படி இப்படி 'டுப்'புகளும் 'அதிர் வேட்டு'களும் அடிக்கடி வெடிக்கப்படுகின்றன. பொன்னம்பலத்துக்கு ஒன்றைச் சொல்லிவைக்கிறோம். 'தனித் தமிழ் நாடு' என்ற 'புலுடாஸ்' கோரிக்கையை அவர் கைவிடவேண்டும். இக்கோரிக்கை பிரச்சார தந்திரத்திற்காகவேனும் வற்புறுத்தப்பட்டால் தமிழ் மக்கள் அலையலையாகத் திரண்டு அதை எதிர்ப்பர். பொன்னம்பலமும் அவரைச் சுற்றியிருக்கும் பணக்காரக் கும்பலும் நினைப்பதுபோல இன்று தமிழ் மக்கள் எடுப்பார் கைப்பிள்ளைகள் அல்ல. புரட்டர்கள் உணர்வார்களாக.

# ஆர்.எஸ்.எஸ். தடைசெய்யப்பட்டது! 'சிவசேனா'வுக்கு தடையில்லை! ஏன்?

—3-ம் பக்கத் தொடர்

வருந்து' வதாக நடிக்கும் மத்திய காங்கிரஸ் மந்திரிகள் இந்த இனவெறி இயக்கத்தை தடைசெய்ய முன்வருகிறார்களில்லை. இதற்குப் பொறுப்பான மத்திய மந்திரி சாவன் பிரச்சினையைத் தட்டிக்கழித்துக் கொண்டே வருகிறார். ஆனால் இந்த 'சிவசேனா' வளர்ச்சி மிகப் பெரிதாக வளர்ந்து வருகிறது. பம்பாயில் ஒரு நகர நிர்வாகத்தையே சிவசேனாக் கட்சி போட்டியிட்டுப் பிடித்துவிட்டது. வட இந்தியாவில் தென்னிந்திய துவேஷத்திற்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணமாகும். தென்னிந்தியருக்கு 'ரத்தக்காயங்கள் விளைவிப்போம்' என்று ரத்தத்தில் கையெழுத்திட்ட கடிதங்களை சிவசேனாக் கட்சியினர் பம்பாயிலிருக்கும் தென்னிந்தியருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்களாம்.

'சிவசேனா' வின் தென்னிந்திய துவேஷத்தையிட்டு தமிழக முதல்வர் அண்ணாத்துரை, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் 'தலைவர்' ராமமூர்த்தி போன்றோர் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்கள். அத்துடன் நிலைமையை நேரில் சென்று பரிசீலிக்க இடதுசாரி கம்யூனிஸ்ட் உமா நாத்துடன் ஒரு தி. மு. க. தலைவரை அனுப்பிவைக்கும்படி தோழர் ராமமூர்த்தி திரு. அண்ணாத்துரையிடம் தொலைபேசி மூலம் கூறியதற்கிணங்க தி.மு.க. வும் அ.தன் தலைவர் ஒருவரை டில்லி அனுப்ப முன் வந்துள்ளது.

## மன்னார் சொன்னார்!

பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியபோது மன்னார் தமிழரசுக் கட்சி எம்.பி.திரு.அழகக்கோன் கூறிய தாவது:-

"என்னுடைய தொகுதியில் மூலப் பொருட்கள் பல இருக்கின்றன. அவைகளை வைத்து புதிய தொழிற்சாலைகளை எற்படுத்தி, வேலை இல்லாமல் இருப்போருக்கு ஏன் வேலை வசதி அளிக்கக் கூடாது?

"கடந்த பல வருடங்களாக நிபுணர்களை அனுப்பி என் தொகுதியில் உள்ளமூலப்பொருட்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்படி நான் கூறியும் இதுவரை ஒன்றும் நடைபெறவில்லை, அங்கு ஒரு சிறிய சிமெந்துத் தொழிற்சாலை, கடுதாசித் தொழிற்சாலை போன்றவற்றை ஏற்படுத்த வசதி இருந்தும், இதுவரை ஒன்றும் செய்யப் படவில்லை.

"மீன்பிடித் தொழிலைப் பொறுத்தவரையில், இதுவரை ஒன்றுமே செய்யப் படவில்லை. என்னுடைய பகுதியில், இலங்கையிலே மிகப் பெரிய மீன் பிடிக்கும் கடற் பிரதேசங்கள் உண்டு. ஆகவே இயந்திரப் படகுகளை அனுப்பி மீனவர்கள் இத்தொழிலை வளர்க்க வழி செய்யும் மாறு நான் அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

"இயந்திரப் படகுகள் இருந்தால் மீன்பிடிப்பது இலகுவாக இருக்கும். இதனால் நாட்டுக்கு அதிக மீன் வழங்கவும் முடியும்.

"மீனவர்கள் மீன் பிடித்துறையில் விஞ்ஞான அடிப்டையில் பயிற்சிபெற, மீனவர்கள் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கும்படிகூறியும், இதுவரை அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.இவ்வாறான பயிற்சி நிலையங்களால் நன்மைகள் ஏற்படும் என்பதில் சந்தேகம் உண்டா?

மன்னாரில் பெரும் அளவில் மீன் பிடிக்க வசதிகள் இருப்பதால் மீன் களை டின்களில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏர்படுத்தலாம். இவ்வளவு வசதிகள் இருந்தும் அமைச்சுஒன்றையாவது இன்னும் ஆராய்ந்து பார்க்க முன்வரவில்லை.

1964-ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியால் பலர் வீடு இழந்தனர். அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் போதிய கவனம் செலுத்தவில்லை. ஆகவே மீனவர்களின் வசதியை முன்னிட்டு அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் படியும் கேட்டுக் கொள்கிறேன், என்றார்.

தமிழரசுக் கட்சி இன்றுஆளும் கட்சிகளில் ஒன்றாகவிருக்கிறது. எனினும் அதனது கையாலாகாத்தனந்தான் மன்னார்'எம்பி'யின் பேச்சிலிருந்து தெட்டத்தெளிவாகிறது. தமிழ் பகுதிகளை பொருளாதார ரீதியில் திட்டமிட்டு வளர்க்க, வளமாக்க யு. என்.பி. விரும்பவே மாட்டாது. எனவே தமிழரசுக் கட்சி இன்னும் யு. என். பி.க்குச் சோப்புப் போட்டுக் கொண்டிருப்பது ஏன்?

# தலையிலும் அடி! வயிற்றிலும் அடி! காங்கிரஸால் இடி!

கலகா பகுதியில் வாசிமலை என்ற தோட்டம் காங்கிரஸ் தோட்டமாம்! காங்கிரஸ் சங்கம் முதலாளியின், முதலாளிகளுக்கு உதவும் சங்கம் என்பது பிரசித்தம்- இதனால் காங்கிரஸ் சங்கம் இருக்கும் தோட்டங்களில் நிர்வாகம் காட்டுமிராண்டித் தனம் கட்டவிழ்த்து விடப்படுவது சகஜம். தட்டிக்கேட்க ஆளில்லை; கேட்க வேண்டியவன் சுரண்டப்படுபனின் சகபாடி-வர்க்கத் தோழன். வாசிமலை தோட்டத்தில் ரேஷன் மா நிறுவையில் குறைந்திருந்ததாம். இதைச் சங்கத தலைவர் கணக்கப் பிள்ளையிடம் ஆட்சேபித்தாராம். உடனே துரைக்குக் கோபம் வந்தது! ஜோடித்தார் கதை ஒன்றை. கணக்கப்பிள்ளையிடம் அவமரியாதையாக நடந்து கொண்டார் என்று கூறி சங்கத்தலைவரை ஒரு வாரம் வேலை நீக்கம் செய்தார். இதே தலைவர் தான் சமீபத்தில் காக்கிக் காடையர்களால் தாக்கப்பட்டவர். தலையில் அடித்த போதும் தடுத்துக் கேட்க ஆளில்லை! வயிற்றில் அடித்த போதும் தடுத்துக் கேட்க ஆளில்லை! ஏன்? கேட்க வேண்டியவன் அடித்தவர்களின் தோழன்! அதனால் கேட்கமாட்டான்! தொண்டமான்! துரோகக்கும்பலின் தொண்டு இது தான். இதனால் இன்று தொண்டமான் கோட்டை சரிகிறது. செங்கொடிச் சங்கம் ஓங்குகிறது! தொழிலாளரின் தோழமைச் சங்கம் செங்கொடிச் சங்கம் ஒன்று மட்டுமேயாகும்! இத்தோழர்கள் செங் கொடிச் சங்கத்திலிருந்தால் எந்தப் பயலேனும் தொட்டுப்பார்ப்பானா? தொழிலாளர்களே சிந்தியுங்கள்.

# தொண்டமான் கும்பலுக்கு! தொழிலாளி பணம் சம்பல்!

பகல் முழுதும் பாட்டாளித் தோழர் ஒருவரை பசியாலே பரிதவிக்க விட்டார் தொண்டமான் காங்கிரஸ் பிரதிநிதியொருவர்! 24-8-67 அன்று மாலை பசியால் மயங்கிய பாட்டாளியொருவர் தீப்பொறிக் காரியாலயத்திற்கு வந்து கூறிய பரிதாபக் கதையை அப்படியே கீழே தருகிறோம்.

பத்தனையில் பொதுக் கூட்டம் நடாத்துவதற்கென்று தொழிலாளர்களிடம் பணம் வசூலிக்கப்பட்டது. சில தோட்டங்களின் பொருளாளர்களிடமிருந்து திருப்பித்தருகிறோம் என்று கடனாகவும் பணம் வாங்கப் பட்டது. பொகவத்தை டொப் டிவிஷன், குயின்ஸ்பரி, ரொஸிட்டா போன்ற பல தோட்டங்களின் பொருளாளர்கள் இதற்காகப் பணம் கொடுத்தார்கள். பொகவத்தை டொப் டிவிஷனைச் சேர்ந்த தோழர் வி. தங்கையா பதினைந்து ரூபா இதற்காகக்கொடுத்தார். கூட்டம் நடந்து முடிந்த பின்னர் தலைமைக் காரியாலயத்திலிருந்து பணம் வந்தவுடன் வாங்கிய பணத்தைத் தருகிறேன் என்றார் பிரதிநிதி. வாங்கிய பணத்திற்கு அவர் ரஸீது கொடுக்கவுமில்லை. 24-ந் திகதி அட்டனில் வைத்துப் பணம் தருகிறேன் என்று பிரதிநிதி கூறியதை நம்பி, வேலைக்குப் போகாமல் பணம் கொடுத்திருந்தவர்கள் பலமைல் தூரத்திலிருந்து அட்டனுக்கு வந்தனர். ஆனால் அதற்கு முன்னரே பிரதிநிதி இரகசியமாக மாற்றல் பெற்றிருந்தார்! தொழிலாளர்கள் பசியோடு காரியாலயத்தில் காத்திருக்கும் போது, பிரதிநிதி அவர்களை ஏமாற்றி விட்டு, கொல்லைப் புறமாகப் போய் புதிய இடத்திற்கு ஓடிவிட்டார். பிரதிநிதி தொழிலாளரை ஏமாற்ற, அவரது சூட்கேஸை எடுத்துச் சென்ற உதவிப் பிரதிநிதியும் உதவி செய்தார்! கையில் காசின்றி, பகல் முழுதும் பச்சைத் தண்ணீரும் இன்றி, பட்டினி கிடந்தவர்கள் இறுதியில் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர். பட்டினி வேறு; பஸ்ஸிற்குக் காசில்லா நிலை வேறு. என்ன செய்வதென்று தெரியாது அவர்கள் கலங்கினர்! பதை பதைத்த பாட்டாளி கடைசியில் பாட்டாளியின் உயர்வுக்காகப் பவனி வரும் தீப்பொறி காரியாலயத்திற்கு வந்து தனது சோகக் கதையைக் கூறினர்! இதே தோட்டத்தில் மூன்று மாதங்களாக சந்தா பணத்திற்கு ரஸீது கொடுக்கப்படவில்லையாம்!

பார்த்தீர்களா தொண்டமான் காங்கிரஸின் துரோகச் செயலை! தனி ஒரு பிரதிநிதி மாத்திரமல்ல தொண்டமான் காங்கிரஸே தொழிலாளர் துரோகிகளின் கூட்டம் தான்! இதனால்தான் இன்று துரோகத்தை உணர்ந்த தொழிலாளர் துயர் துடைக்கும் செங்கொடிச் சங்கத்தில் ஆயிரமாயிரமாகச் சேருகின்றனர்.

தீய சக்திகளையும், தீயவர்களையும் சாடி, தொழிலாளரின் உயர்வுக்காகப் பாடுபட்டுவதுதான் தீப்பொறியின் நோக்கம். ஆனால் இதனால் மட்டும் தொண்டமானின் துரோகக் கும்பலைப் போன்றவைகளின் துட்டத்தனம் அடங்கிவிடாது. அவர்களை விட்டு விலகி, அவர்களை அடித்து விரட்டினால்தான் அவர்களின் துரோகம் நீங்கும்; தொழிலாளரின் வாழ்க்கை உயரும்!

## நடவடிக்கை வெற்றி!

அட்டன் மாவட்ட வட்டவளைத் தோட்ட செங்கொடிச் சங்கத்தின் முன்னணித் தோழர் சந்தியாகுவின் வேலையை நிர்வாகம் நிறுத்தியபின் செங்கொடிச் சங்கம் நடவடிக்கை எடுத்ததால், சந்தியாகுவிற்கு மீண்டும் வேலை கிடைத்தது.



## கங்காணி டோய்! ... பொறுக்கித் தின்[...] காலம் மாறிப் போச்சு!

கொட்டகலைப் பகுதியில் உள்ள தோட்டமொன்றிற்கு புதிதாக வந்தார் தொந்தி பெருத்த பெரிய கங்காணி ஒருவர். இவர் வந்தவுடன் என் தலைமையில் திருவிழாவைப் பெருவிழாவாக நடத்துகிறேன்; அதற்கு வெளியிடங்களிலிருந்து நாதஸ்வர, கரகக் கலைஞர்களைக் கொண்டு வருகிறேன் என்றார். கோலாகல விழாவுக்காக கொள்ளையாகப் பணம் ஆயிரக் கணக்கில் வசூலிக்கப்பட்டது. யாரிடமிருந்து? பட்டினி கிடக்கும் பாட்டாளி மக்களிடமிருந்து. ஆனால் பின்னர் கலைஞர்களும் அழைக்கப்பட்வில்லை; கலை நிகழ்ச்சிகளும் நடத்தப் படவில்லை! சேர்க்கப்பட்ட பணம் கங்காணியின் சோக்குக்காகப் பயன்படுத்தப்பட்டது. இன்று இப்பணத்தைக் கொண்டு தனது மகனை அரசாங்கப் பாடசாலையில் படிக்க வைக்கிறாரும் இக்கங்காணி! திருவிழா நேரத்தில் மக்கள் கடவுளின் சிலைக்குப் பட்டுச் சீலைகள் போர்த்துவது வழக்கம். இவைகள் பின்னர் ஏலம் போடப்பட்டு, சேரும் பணம் உண்டியலில் சேர்க்கப் படும். ஆனால் இந்தப் பொறுக்கிக் கங்காணி சிலைக்குப் போர்த்தப்பட்ட பட்டுத் துணியைக் கொண்டு தனது செல்வக் குழந்தைகளுக்கு உடை தைத்துக் கொடுத்திருக்கிறார்! இதனைத் தவிர்த்து உடைந்து போன தனது இரண்டு பற்களைக் கட்டுவதற்கும் இந்தப் பணத்தைஉபயோகித்தாராம்!

இவரின் தந்திரத்தை அறிந்த தொழிலாளர்கள் இன்று கணக்கு விபரம் கேட்கின்றனர். ஆனால் பணம் பொறுக்கிக் கங்காணி மௌனம் சாதிக்கின்றார்! இவரைப் போன்றவர்கள் விழா நடத்துவது தங்கள் உல்லாசத்துக்காகப் பணம் திரட்டத்தான் என்பதை தொழிலாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# திருமணச் செலவு ஐந்து லட்சமாம்!

## தொண்டமான் மகனுக்கு!

தோட்ட முதலாளி தொண்டமானின் மகனுக்கு திருமணச் செலவாகமட்டும் ஐந்து லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டதாக பேசிக் கொள்ளப்படுகிறது. தோட்டத் தொழிலாளரைச் சுரண்டிய பணம் அப்போது 'தண்ணி' பட்டபாடாகச் செலவு செய்யப்பட்டதாம். திருமணத்திற்கு வந்திருந்தோருக்கு பிராந்தி, விஸ்கி போன்ற உயர் குடிவகைகள் வழங்கப்பட்டனவாம். இதெல்லாம் யார் பணம்? யார் வியர்வை? தொழிலாளியின் ரத்தம்தான் திருமண விழாவில் குடிவகையாகப் பரிமாறப்பட்டது. பெரும் நடனநாட்டிய விழாக்களும் நடந்தனவாம். முன்னாள் பிரதமர் முதல் முன்னாள் கவர்னர் சர். ஒலிவர் குணத்திலகா வரை திருமண விருந்தினர்களாக பல பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனராம். தொண்டமானின் மகனது திருமணத்துக்கு இவ்வளவு ஏற்பாடுகள். மின்சார விளக்கென்ன, கண்கவரும் ஜோடனைகள் என்ன? எல்லாமே 'சொர்க்கபுரியாக' அன்று மாறியிருந்தது. இதெல்லாம் யார் பணம்? தொண்டமான் இரத்த வியர்வை சிந்தி உழைத்த பணமா? இல்லை. ஏழைப் பாட்டாளியின் சொத்து! வயிறு நிறைய சாப்பிடக் கிடைக்காத தொழிலாளியின் சொத்து! மாயாண்டியே! மருதாயே! சிந்தித்துப்பார். உனது மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் என்றால் சேலைவாங்கப் பணம் இருக்கிறதா? நாலு பேருக்குச் சோறுபோட வக்கிருக்கிறதா? ஆனால் உங்கள் உழைப்பால் உயர்ந்த தொண்டமான் போன்ற தோட்ட முதலாளிகள் உங்கள் ரத்தத்தில் 'சுகங்கள்' அனுபவித்து விட்டு 'சக்கை' யாக உங்களைக் கடலுக்குள் தள்ளப்பார்க்கிறார்களே? சிந்தியுங்கள். துரோகிகளுக்கு முடிவு கட்டுங்கள்.

# காங்கிரஸ் கருங்காலியே! கூட்டிக் கொடுக்காதே!

டயகமப் பகுதியைச் சேர்ந்த ஒரு தோட்டத்தில் மூக்குவெட்டி என்ற பட்டப் பெயரில் தொண்டமான் காங்கிரஸைச் சேர்ந்த முண்டப் பயல் ஒருவன் கங்காணியாக இருக்கின்றானும்! இவன் அத்தோட்டத்துத் துரைக்கு அப்பாவிப் பெண்களைக் கூட்டிக் கொடுத்துப் பணம் சம்பாதிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளானும்? இந்த, இழி தொழிலுக்கு வர மறுக்கும் தோட்டப் பெண்களை இவன் பயமுறுத்தியும், பலாத்காரமாகவும் காரியங்களைச் சாதிக்கிறானும்! பிடிவாதமாக மறுக்கும் பெண்களைப் பழி தீர்க்கிறானும்! இவனது நரிவலையில் ஏமாந்து வீழ்ந்த பெண்கள் பலர் தோட்டத் 'தொரையிடம்' கற்பைப் பறி கொடுத்துக் கண்கலங்கி கதறி நிற்கிறார்களாம்! தொண்டமான் பத்துச் சதத்தைத்தான் கூட்டிக் கொடுத்தார்! ஆனால் அவரது காங்கிரஸைச் சேர்ந்த பெரிய கங்காணிமார்களோ இன்னும் ஒரு படி முன்னேறி விட்டனராம்! அதனால்தான் அப்பாவி தோட்டக்கன்னியரைதொரைமாருக்குக் கூட்டிக்கொடுத்துத் தொழில் புரிகின்றனராம். பெரிய கங்காணிப் பரம்பரைதான் தோட்டமக்களை இப்படியெல்லாம் கருவறுக்கிறதென்று தொழிலாளர்கள் பேசிக் கொள்கிறார்களாம்! கழிசடைக் கங்காணிமார் திருந்தட்டும் அன்றேல் தீப்பொறியால் தோலுரிக்கப் படுவார்கள்!

# தோழர் முத்துசாமிக்கு மீண்டும் வேலை

அட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த மஸ்கெலியா பகுதியிலுள்ள பெரிய தெய்வக் கந்தை (டீசைட்) தோட்டத் தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தில் சேர்ந்தவுடன் சங்கத்தின் முக்கிய தோழரான திரு. முத்துசாமி கங்காணியின் வேலையை துரை நிறுத்தினர்.

செங்கொடிச் சங்கம் இதை ஆட்சேபித்துதொழிற்கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்தது. சங்கத்துணைத் தலைவர் தோழர் ரொசாரியோ பெர்ணண்டோ இவ்வழக்கில் தொழிலாளர் சார்பாக வாதாடி வெற்றி பெற்றார். தோழர் முத்துசாமிக்கு மீண்டும் வேலை கிடைத்தது.

தலைமை அஞ்சல் நிலையத்தில் செய்தி ஏடாகப் பதிவு செய்யப்பட்டது.

# தேயிலை ஏற்றுமதி!

தீப்பொறி

உண்மை, நேர்மை, பயமின்மை

# தொழிலாளியும் ஏற்றுமதியா?

இலங்கைத் தேயிலைத் தூரிலே மாசியும் தேங்காயும் கிடைக்கிறதென்று ஏமாற்றி அழைத்து வரப்பட்டவர்களின் வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர்களை மீண்டும் ஏமாற்ற- ''இந்தியாவிலே பாலும் தேனும் ஓடுகிறது. மூட்டையைக் கட்டுங்கள். அங்கே முழு வாழ்வு கிடைக்கும்'' என்ற போலிப் பிரச்சாரத்தை ஒரு கும்மல் திட்டமிட்டுச் செய்துவருகிறது. அவர்கள் தான் தொண்டமான் காங்கிரஸைச் சேர்ந்த கருங்காலிகளாகும்.

## தொழிலாளர் ஏற்றுமதியா?

எமது மரகத நாடு உருப்படியாக ஏற்றுமதி செய்யும் ஒரே பொருள் தேயிலையாகும். இத்தேயிலையை உற்பத்தி செய்த தோட்டத் தொழிலாளர்களையும் தொண்டமான்களும், ஆளும் கூட்டமும் கண் காணு இடத்துக்கு ஏற்றுமதி செய்ய முனைவது எவ்வளவு துரோகத்தனமான செயல்.

## லாபமும் சாபமும்!

எமது நாட்டுக்குக் கிடைக் கிடைக்கும் மொத்த வருமானத்தில் பாதிக்கும் மேற்பட்ட, 60 சதவிகிதம் தேயிலையாலேயே கிடைக்கிறது. இத்தகைய லாபம் பெற்றுத் தந்த தொழிலாளர்களை சாபம் தந்தது போல் அந்தமான், நீகோபார் தீவுகளுக்கு அனுப்பிச் சாகடிப்பது எவ்வளவு மிருகத்தனமான செயல்.

## வளமும் பிணமும்

காடாகக்கிடந்த நாட்டைச் செப்பனிட வற்றுது உழைத்து, தம் வலிமையை இழந்து, நாட்டை வளங்கொழிக்கச் செய்த தொழிலாளர்களை இன்று நடமாடும் பிணங்களாகக் கப்பலேற்றி நாடுகடத்தச் சதி நடைபெற்றுவிட்டது. இனி அது அமுலாவது தான் பாக்கி. இச்சதிஅமுலாகுமுன்வேறொரு சதி நடக்கிறது. அது தான் பொய்ப் பிரச்சாரச் சதியாகும்.

## காங்கிரஸ் கருங்காலிகள்

தொண்டமானின் தொண்டரப் பொடியார்கள்தான் இத்தகைய பொய்ப் பிரச்சாரங்களைத் திட்டமிட்டுச்செய்து வருகிறார்கள். முதலாவது: தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குப் போகாவிட்டால்...இங்கு ஒவ்வொரு தோட்டங்களிலும் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு தோட்டத் தொழிலாளர்கள் துன்புறுத்தபடுவார்கள் என்று தொண்டமான் காங்கிரஸ் கூலிகள் கூறித் திரிகின்றனராம்.

அத்துடன் இன்னொன்றையும் கூறுகிறார்களாம். அதாவது ''தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குப் போய்விட்டால் அங்கு நல்ல வாழ்வு கிட்டும், இந்திய அரசாங்கம் இலங்கை அகதிகளை கண்ணின்மணிபோல் காக்கும்'' என்றும் கூறுகிறார்களாம்' இவையெல்லாம் தொண்டமான் காங்கிரஸ் திட்டமிட்டுச் செய்யும் பொய்ப் பிரச்சாரம் என்பதை தோட்டத் தொழிலாளர்கள் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

## 'பொணம்' விழும் இந்தியாவில், 'சோகமிருக்கு' என்று பிரச்சாரம்! தொழிலாளர்களே ஏமாறுதீர்!

### 2,100-ம் 5,25,000-ம்

பர்மாவில் இருந்து வந்த இரண்டாயிரத்து நூறு பேருக்கு ஆண்டுகள் பலவாகியும் 'புனர்வாழ்வு' தராமல் அவர்களைப் பிணமாகவிட்ட இந்திய அரசாங்கம் ஐந்தே கால் லட்சம் இலங்கை அகதிகளுக்கு வாழ்வழித்து விடுமா? நினைத்தாலும் முடியுமா? அங்கிருப்பவர்களுக்கே சோறு போட முடியாத 'பஞ்ச' பாரத அரசாங்கம் இங்கிருந்து போகிறவர்களுக்கு எதைப் போடும்; வாயில் மண்ணைத்தான் போடும். இந்தியாவில் வற்றுத வறுமைமை என்ற படியால் தானே விபச்சார விடுதிகளை நடத்துவதற்கு ஆங்காங்கே இந்திய அரசாங்கம் 'லைசென்ஸ்' வழங்கியுள்ளது.


### சொத்துக்காரர் போகட்டும்!

இந்தியாவில் சொத்துள்ளவர்கள் போகலாம். ஆனால் இந்தியாவில் சொத்தில்லாதவர்கள் கடலையே காணுதவர்கள் ஏன் போகவேண்டும். சொத்துள்ளவர்கள் விருப்பத்தின் பேரில் போகிறார்கள். சொத்தில்லாதவர்கள் கட்டாயத்தின் பேரிலும் போகக் கூடாது. தொண்டமான் போன்ற துரோகிகள் பேச்சுக்களை நம்பி ஏமாறவும் கூடாது. தொழிலாளர்களைச் சுரண்டித்தின்ற பின் அவர்களை கடல் கடந்து ஓடிவிடும்படி கூறித்திரியும் தொண்டமானும், குட்டித் தோட்ட முதலாளிகளான அவரது பிரதிநிதிகளும் என்று மலையகத்தை விட்டு ஓடுகிறார்களோ அல்லது விரட்டப்படுகிறார்களோ அன்று தான் மலையகத் தொழிலாளர்களுக்கு விடிவு நாள்.

### பயன் பெற்று வாழ பயம் ஏன்?

இந்த நாட்டை வளங்கொழிக்கச் செய்த தோட்டத் தொழிலாளர்கள் கண்ட மிச்சம் என்ன? நடை பிணங்களாகியதுதான் மிச்சம். இந்த நிலை ஏன் ஏற்படவேண்டும்? துரோகி தொண்டமான் போன்ற தோட்ட முதலாளிகளை நம்பியிருந்ததால்தான் இந்த இழி நிலை. பக்குச் சுதப் பிச்சைக் காசுடன் கடல் கடக்கச் சொல்லும் தொண்டமான் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தையும் செக்ரோலில் பிடிக்க ஏற்பாடு செய்துள்ளார். இதெல்லாம் பச்சைத் துரோகமல்லவா? இந்த நாட்டை வளமாக்கிய தொழிலாளர் இந்த நாட்டிலேயே வளமான வாழ்வு வாழ வேண்டுமானால் துரோகி தொண்டமான் சங்கத்தை விட்டு வெளியேறி செங்கொடி சங்கத்தின் புரட்சிகர பேரணியில் திரண்டுபோராட முன்வர வேண்டும்.

## [illegible]டி இறந்து.....!



இப்படி கோர விபத்துகளுக்கு இலக்காகி தமது உயிரைத் தாரை வார்த்து தேயிலைத் தொழிலையும், நாட்டையும் செழிப்பாக்கி அதன் பயனைப் பெறுமுன் 'ஒட்டாண்டிகளாக' கட்டாயத்தின்பேரில் கடல் கடந்து கண்காணு இடத்துக்கும் பயணம் செய்வதா? கூடவே கூடாது!

## பஞ்சபாரத இந்திராவே வருக!

— பிணம் குவியும் நாட்டின் பிரதமரே வருக!

— விபச்சார விடுதிகளுக்கு 'லைசென்ஸ்' கொடுத்திருக்கும் நாட்டின் பிரதமரே வருக!

— சொந்தக் கணவனை விவாகரத்துச் செய்த பிரதமரே வருக!

— 1 படி அரிசி ரூபா 4 விற்கும் நாட்டின் கண்மணியே வருக!

— 'நாடற்ற' மக்களை 'கப்பல் கொள்ள' வரும் செம்மலே வருக!

## (மலையக) செங்கொடிச் சங்க முகவரிகள்

ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் எமது மலையகப் பகுதி செங்கொடிச் சங்க முகவரிகளைக் கேட்டு 'தீப்பொறிக்கு' கடிதங்கள் எழுதியிருப்பதால் அவற்றினைக் கீழே தருகிறோம்.

தோழர் எம். சுந்தரம் செ. ச. குணவர்த்தனபில்டிங் அட்டன்.
,, எம். எல்லப்பன் செ. ச. ஜெயந்தி மாவத்த தலவாக்கொல்லை.
,, எஸ் முருகையா பசுமலை பஜார், அக்கரபத்தனை,
,, எஸ். நடராஜா, 6 லோர்சன் வீதி நுவரேலியா.
,, வி. எஸ். பொன்னம்பலம் 1/15 மெயின்வீதி அப்புத்தளை.
,, எஸ். மணி, 6, குமாரசிங்கம் விதி பதுளை.
,, எப். டீன், 22, அம்பேகமுவ வீதி நாவலப்பிட்டிய.

—6-ம் பக்கத் தொடர்

சொல்ல வேண்டும். மார்க்ஸிச எதிர்ப்பு முன்னணியின் அயோக்கியத்தனங்களை முஸ்லிம் மக்கள் இன்று உணர்ந்து வருகிறார்கள்.

இன்று தொழிலமைச்சர் முகமதுவுக்கு செல்லும் இடமெல்லாம் முஸ்லிம் மக்கள் கருப்புக்கொடி காட்டுகிறார்கள், இது இவ்வாறிருக்க—

லுணுவை வாடி வீடு விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இந் நாட்டின் பெரிய புள்ளிகள் என்ற வகையில் அவ்விஷயத்தை விசாரணை செய்யுப் பொலிசாரையே 'இடமாற்றம்' செய்து விடுவோம். 'ஜாக்கிரதை' என்றவாறு மறைமுக பயமுறுத்தல்கள் நடைபெறுகின்றனவாம். இதை (யு.என்.பி.யின்) பெரும் அரசியல் வாதிகள் தான் செய்வதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்ததென ஆங்கிலத் தினசரியொன்றில் செய்தி வெளிவந்துள்ளது.

இந்நிலையில் லுணுவை வாடிவீட்டு விஷயங்களின் விசாரணை உருப்படியாக முடியுமா என்பதும் சந்தேகமே! சகல பெரும் 'புள்ளி'கள் மீதும் வழக்குத் தொடரப் படுமா என்பதும் சந்தேகமே. ஒழிக? லுணுவை வாடி வீட்டு மார்க்ஸிச எதிர்ப்பு!

ஆசிரியர்: எம். கே. அந்தனிசில், பதிப்பித்து வெளியிடுபவர்: ஆ. இராமையா, அச்சிட்டது: 'மக்கள் அச்சகம்' இல. 253, மல்லிகைப்பூ பஜார் அட்டன்.